ஜுவல் லேண்ட் ஜுவலரி
வழங்கும
அரியதோர் சந்தர்ப்பம்
உங்களுக்குப் பிடித்தமான தங்க நகைகளை வாங்கி மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தலாம். முழு விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளவும்.
ஜுவல் லேண்ட் (பிரைவேட்) லிமிட்.
447, மருதானை ரோட், கொழும்பு-10
தொலைபேசி- 699326 — 685910

தினபதி
3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6532 1990 மார்ச் 7 புதன்கிழமை ✱ ★ ★ தினபதி

அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
இன்றே விஜயம செய்யுங்கள்
JEWEL LAND (pvt) LTD
No 447 Maradana Road. Colombo 10.
DEALERS IN JEWELLERY
தொலைபேசி- 699326 — 685910

ஈ. பி. ஆர். எல். எப்: வரதராஜப் பெருமாளின்

# ஈழப் பிரகடனத்துக்கு அரசின் மீது சிறிமா குற்றச்சாட்டு

## புலிகளுடன் புது உறவு; சட்ட மீறல் சம்பவங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார்

கொழும்பு, மார்ச் 6

வரதராஜப் பெருமாள் ஈழப் பிரகடனம் செய்ததற்கு திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று நாடாளு மன்றத்தில் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தினார்.

அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தாலேயே இது நடந்தது.

அரசாங்கம ஈ பி ஆர் எல் எப இயக்கத்தைப் புறக்கணித்து விட்டு புலிகளுடன் புது உறவு வைத்துக் கொண்டது.

முன்னர் சட்டமீறல் சமபவங்கள் நடந்தபோதெல்லாம அரசாங்கம உடனுக்குடன் ...களைப் பறிமுதல் செய்யவும சட்டம இடமளிக்கிறது.

அப்படி இருந்தும அரசாங்கம எந்தவிதமான நடவடிக்கையும இன்னும எடுக்கவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபை முதல் அமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாளின் சுதந்திர ஈழப் பிரகடனத்தை அரசாங்கம தேவிக்குரிய விடயமாகக் கருதக் கூடாது.

சுதந்திரப் பிரகடனத்தை வன்மையாக கண்டிக்கிறது.

இன்றைய அரசின் கையாலாகாத்தனமே தன்னிச்சையாகத் தனி நாடு பிரகடனப்படுத்தும அளவிற்கு அவர்களை உற்சாகப்படுத்தி விட்டது.

1977 அம அண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுதியான ஒரு நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கவில்லை.

## சோமண்ணை



நன்றி மறவாத ஜீவனுக்கு எங்கே அடிச்சாலும அது காலைத்தான் தூக்கும் பாருங்கோ-

கொழும்பில்

## ஹமீதுடன் புலிகள் பேச்சுவார்த்தை

### ஜனாதிபதியையும் சந்திப்பர்

கொழும்பு, மார்ச் 6

மாத்தயா என்றழைக்கப்படும திரு கோபாலசுவாமி மகேந்திரராஜாவின் தலைமையிலான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தூதுக் குழு கடந்த திங்கட்கிழமை கொழும்புக்கு வந்து உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீதுடன் பேச்சு வார்த்தை நடத்தியது.

முன்னணியின் பொதுச் செயலாளர் திரு யோகி மற்றும அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம ஆகியோரும இந்தக் குழுவில் இடம பெற்றனர்.

தூதுக்குழு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தற்போதைய நிலைமையின் கீழ் மேற் கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் பற்றி அமைச்சரிடம தெரிவித்ததாகத் தெரிய வருகிறது.

தூதுக் குழுவினர் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவுடனும பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என நமபப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

சகல சமூகங்களும சம உரிமைகளை அனுபவிக்க வேண்டும்

(2 ஆம பக்கம பார்க்க)

## 550 ஜவான்கள் தாயகம் பயணம்

கொழும்பு, மார்ச் 6

மேலும 550 இந்தியப் படை வீரர்கள் நேற்று நாட்டை விட்டுச் சென்றனர். கடந்த மூன்று நாட்களில் ஆயிரத்து 400க்கும அதிகமான இந்தியப் படையினர் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் படையினர் துரிதமாக நாட்டை விட்டு வெளியேறி வருவதால் ஏனைய படை வீரர்களும எதிர்வரும 15 ஆம திகதிக்குள் இந்தியா திருமபிச் சென்று விடுவர் என்றே எதிர்பார்க்கப்படுகிறது என்று ஈ பி ஆர் எல் எப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் இப்போது 19 ஆயிரம இந்தியப் படை வீரர்கள் இருப்பதாக இப் பேச்சாளர் மதிப்பிட்டுள்ளார்.

இதே சமயம இந்தியப் படை வீரர்கள் திருகோணமலையில் இருந்து கப்பல் மார்க்கமாக கடந்த ஞாயிறு திருப்பி அனுப்பப்பட்ட போது பல ஈ பி ஆர் எல் எப் உறுப்பினர்களும அவர்களுடன இந்தியா சென்றனர் என்று தெரிகிறது. (ண-032)

## பிரேதம் ஏற்றி சென்ற வாகனம்

கொழும்பு, மார்ச் 6

பிரேதம ஒன்றை ஏற்றிச் சென்ற வாகனம, பாதை விலகி விபத்துக்குள்ளானது. இதனால் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட பிரேதம தூக்கி வீசபபட்டது. பிரேதப்பெட்டியும சுக்கு நூறாகியது.

இச்சமபவம கினிகத்ஹேனை, கடவளை பகுதிக்கு அருகில்

(2 ஆம பக்கம பார்க்க)

## ஈழப் பிரகடனத்தை தமிழ் மக்களே ஏற்றுக்கொள்ளவில்லை

### சபையில் ஈரோஸ் எம். பி. பரா: புலிகளுக்காகவும் குரல் எழுப்பினார்

கொழும்பு, மார்ச் 6

ஈழப் பிரகடனத்தைத் ...

ஈழப் பிரகடனம தொடர்பான விவாதத்தில் பேசும போதே அவர் மேற்கண்டவாறு கூறி...

ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தினர் பொது மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் பொது மக்க...

(2 ஆம பக்கம பார்க்க)

ஈழப் பிரகடனம்

அரசியல் அறிவீனம்

உரிய நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டது.

இவற்றின் விளைவே ஈழப் பிரகடனம் என்று எதிர்க்கட்சித் தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறினார்.

வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது—

எமது கட்சி நாட்டின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க எப்போதும் தயாராகவே இருக்கிறது.

இலங்கை அரசமைப்பின்படி நாட்டுப் பிரிவினை கோருபவர்களையும், அதற்கு ஆதரவாக செயல்படுபவர்களையும் தண்டிக்கலாம்.

அவர்களுடைய சிவில் உரிமைகளைப் பறிக்கவும், சொத்துக்

மாகக் கருதக் கூடாது.

நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் வகையில் ஸ்ரீ ல சு கட்சி திரு வரதராஜப் பெருமாளின்

டைக் கடைப்பிடிக்கவில்லை.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதனாலேயே

(4ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்களே ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அந்தப் பிரகடனம் பற்றி எவரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

இப்படிக் கூறினார் ஈரோஸ் உறுப்பினரான திரு இளையதம்பி பரராஜசிங்கம்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஒருதலைப் பட்சமான

அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:—

மனச்சாட்சி உள்ள எந்த ஒரு தமிழனும் ஈழப் பிரகடனத்தை ஏற்க மாட்டான். பொதுமக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிறு குழுவினரின் அர்த்தமற்ற நடவடிக்கைகளை பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை.

# அரசியல் அறிவீனம் என்று திவ்வியநாதன்

## சபையில் வர்ணனை

கொழும்பு, மார்ச் 6

வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஒருதலைப்பட்சமான ஈழப் பிரகடனம் ஒரு பெரிய அரசியல் அறிவீனம். அனைத்து சமாதானப் பேச்சு வார்த்தைகளையும் நிர்மூலமாக்கி சிதைத்து எறியவே இந்த முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஜே திவ்வியநாதன் இப்படிக் கூறினார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் தன்னிச்சையான ஈழப் பிரகடனம் மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:—

ஈரோஸ் எம் பி பரராஜசிங்கம் கூறியது போல 1990 ஆம் ஆண்டின் நல்ல பகிடி இது. தனி நாடு வேண்டாம் என்று கூறினேன். ஏனென்றால் மக்கள் அமைதியாக இரத்தம் சிந்தாமல் வாழ வேண்டும் என்பதனாலேயே.

அகிம்சைக்காகப் போராடி, அகிம்சையிலேயே நம்பிக்கை வைத்து, இந்த நாட்டின் சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்தவர் தந்தை செல்வா.

அவரின் புனிதமான போராட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# 19 நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது

## — யோகசங்கரி

சில நாட்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாண சபை 19 கோரிக்கைகளை சமர்ப்பித்தது. அவற்றை ஏற்றுக் கொண்டிருந்தால் நிலைமையை ஓரளவு கட்டுப்படுத்தி இருக்கலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு யோகசங்கரி இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் தன்னிச்சையான ஈழப் பிரகடனம் மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது—

தமிழ் மக்கள் காலம் காலமாக ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர். பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச மகளிர் தின விழா இம்முறை கண்டியில்

கொழும்பு, மார்ச் 6

சர்வதேச மகளிர் தின விழா இம்முறை கண்டி நகரிலுள்ள போகம்பரை விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறும் இவ்விழாவில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவும் அவரது பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசவும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

மகளிர் விவகார ராஜாங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டத்துரை தாக்கினாராம்

# 5000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

இராகலை மார்ச் 6

கந்தப்பளை கோட்லொஜ் தோட்டத்தில் தோட்டக் காவலாளி ஒருவர் தோட்டத்துரையினால் தாக்கப்பட்டார் என்று கூறப்படும் சம்பவத்தை அடுத்து அந்தப் பிரதேசத்தில் 4 தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

போர்ட்வுட் - கோட்லொஜ் - கொண்கேடியா மற்றும் புறூக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய சாப்பு சட்டத்திற்கு ஏற்ப போக்குவரத்துச் சேவைகள்

கொழும்பு மார்ச் 6

சாப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்ப போக்குவரத்து சேவைகளையும் நடத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

போக்குவரத்து சபை பஸ் சேவைகளிலும் தனியார் பஸ் சேவைகளிலும் அவ்வாறு மாற்றங்களைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் ரயில் சேவைகளுக்கான நேர அட்டவணைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை கடைகள் திறந்திருக்கும் வகையில் அண்மையில் சாப்புச் சட்டம் திருத்தப்பட்டமை தெரிந்ததே.

அதன் பின்னர் இந்தச் சட்டம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் தவிர்ந்த ஏனைய வார நாட்களில் கொழும்பு தெஹிவளை - கல்கிசை - கொலன்னாவ மற்றும் கோட்டே ஆகிய மாநகர பிரதேசங்களில் மட்டும் அமுலாக்கப்படும் என அமை

2 ஆம் பங்குப் பரிசு

## நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலயத்தில்

# நாட்டு அமைதிக்கு காயத்திரி யாகம்

இராகலை மார்ச் 6

நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலயத்தில் இந்த மாதம் 8 - 9 - 10ஆம் திகதிகளில் பிரம்ம காயத்திரி யாகம் நடைபெறும்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச - கிராமக் கைத்தொழில் மற்றும் புடைவை கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் - போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு எம் எஸ் செல்லச்சாமி - வீடமைப்பு

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

கொக்கலை சுதந்திர வர்த்தக வலயத்தில்

# 10,000 இளைஞருக்கு

# தொழில் வாய்ப்பு

கொழும்பு மார்ச் 6

தென் மாகாணத்தில் கொக்கலையில் அமைக்கப்படும் சுதந்திர வர்த்தக வலயத்தில் 10,000 இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தொழில் பெற்றுக் கொடுக்கப்படும்.

பூஸாவில் இருந்து கம்புறுகமுவ வரை உள்ள பல பகுதிகளுக்கு ஊடாக 500 ஏக்கர் காணியில் "கைத் தொழில் பேட்டை" ஒன்றும் அமைக்கப்படும்.

இதன் மூலமாகவும் மேலும் பலர் தொழில் வாய்ப்பைப் பெறுவர்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் 100 கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்படும்,

வர்த்தக வலயம் 170 ஏக்கர் நிலப்பரப்பில் அமைவுறும்.

சுதந்திர வர்த்தக வலயத்தின் அபிவிருத்திக்காக ஹபராதுவையில் தொலைபேசி பரிமாற்ற நிலையம் ஒன்றும் அமைக்கப்படும்.

விக்டோரியா மின் உற்பத்தி திட்டத்தில் இருந்து அதிசக்தி மிக்க மின் இணைப்புக்கள் பொருத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ல—007)



## சர்வதேச மகளிர் தின ஓவிய கண்காட்சி

சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய சுவரொட்டி ஓவியக் கண்காட்சி ஒன்று கொழும்பு கலாபவனத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. சேவா வனிதா பிரிவுத் தலைவியும் ஜனாதிபதியின் பாரியாருமான திருமதி ஹேமா பிரேமதாச கண்காட்சியைத் திறந்து வைத்தார். காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியம் ஒன்றைச் சுட்டிக் காட்டி அவர் எத்தனையோ வினவுவதைப் படத்தில் காண்க.

சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர் திரு எச் எம் ஏ லொக்குபண்டார ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்

(எ*த)

## பிறந்த நாள் வாழ்த்து



ருபேந்திரன்

இல 11, ஹேகித்த, போகாவத்தையைச் சார்ந்த செல்வன் ருபேந்திரன் 07-03-90 இல் தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்—

## இலங்காதீஸ்வரர் மகாயாகத்தில் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 6

நுவரெலியா இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் மகா யாகத்தில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச கலந்து கொள்வார்—

நாட்டில் சுபீட்சம், சாந்தி, சமாதானம் ஏற்பட வேண்டி இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன் மகா யாகம் எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் 10 ஆம் திகதிகளில் நடைபெறும்—

சுவாமி முருகேசு தலைமையில் இந்தியாவின் தலைசிறந்த சிவாச்சாரியார்களும் இலங்கையின் சிவாச்சாரியார்களும் கலந்து சிறப்பிக்கும் இவ் வைபவத்தில இந்து சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் மூன்று நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார்

10 ஆம் திகதி மாசி மகம் அன்று இடம்பெறும் யாக வைபவத்தில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு சிறிசேன குரே ஆகியோர் கலந்து ஆசி பெறுவர்—

யாகத்தின் மகிமையைப் பிரதிபலிக்கும் "தியானம்" என்னும் இந்த சமய நூலை இந்து சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் அன்றைய தினம் வெளியிட்டு வைப்பார்—

[ல—ங]

## ஈழ பிரகடனத்திற்கு முஸ்லிம் லீக் கண்டனம்

கொழும்பு, மார்ச் 6

வடக்கு கிழக்கு முதல்வர் வரதராஜப்பெருமாள் தனி நாட்டு பிரகடனம் செய்திருப்பதை அகில இலங்கை முஸ்லிம் லீக் வன்மையாகக் கண்டித்திருக்கிறது—

இது தொடர்பாக முஸ்லிம் லீக் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையின் ஒற்றுமை ஒருமைப்பாடு மற்றும் இறைமையின் பொருட்டு தாம தொடர்ந்து செயல்பட்டு வருவோம் என உறுதி கூறியிருக்கிறது—

வடக்கு கிழக்கு மாகாண சபை மேற்படி பிரகடனத்தை நிறைவேற்றிய போது தமது உதவித் தலைவர் அல்ஹாஜ் மசூர் மௌலானா சபையை விட்டு வெளியேறியதை சுட்டிக்காட்டியுள்ள முஸ்லிம் லீக் இதற்காக தமது பாராட்டுகளை அவருக்கு தெரிவித்துள்ளது—

(ந—032)

கணவனிடமிருந்து கடிதம் இல்லை:

## விரக்தியினால் மனைவி கிணற்றில் பாய்ந்து தற்கொலை

கொழும்பு, மார்ச் 6

வெளிநாடு சென்ற கணவனிடமிருந்து கடிதம் ஏதும் வராததனால் விரக்தியுற்ற மனைவி வீட்டுக்கு அருகிலிருந்த கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்—

சபுகஸ்கந்தை பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மாக்கொலை வடக்கு வாசியான நோனா நசீமா பஜிருன் (வயது 28) என்ற இளம் பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர்-

தனது இறுதிச்சடங்கு செலவுக்காக மூவாயிரம் ரூபாவை தந்தையிடம் கொடுத்து விட்டு தன் நகைகளை விற்று கிடைக்கும் பணத்தை அநாதை விடுதிகளுக்கு அன்பளிப்புச் செய்யுமாறும் இவர் தன் தந்தையிடம் கூறி உள்ளார்—

மாக்கொலை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு ஜீ ஜீ டி அல்விஸ் முன்னிலையில் இவரது மரண விசாரணை நடைபெற்றது

விசாரணை முடிவில் நீரில் மூழ்கியதால் மூச்சுத் திணறி ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது— [ல—வ]

## அரசியல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் சப்பாணிப் போராட்டம் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை இன்று வந்து விட்டது.

ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு அனைவருடனும் இணைந்து செயற்பட பாடுபடுவோம். இப்படியான தீர்க்க தரிசனமற்ற எந்த முடிவையும் எடுப்பது மிகத் தவறு என்பதை கூறி வைக்க விரும்புகிறேன்.

வருகிற காலங்களில் ஐக்கியப்பட்ட இலங்கையில் சுமுகமாக வாழ அந்த ஆண்டவன்தான் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

— இப்படி திரு திவ்வியநாதன் கூறினார். (ண—கு)

## இன்றைய திரைகளில்

6 வது வாரம்

கெப்பிட்டல்
(கொழும்பு)
2-30. 6-00, 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30. 2-00. 6-00

கிறனாடா
(பேருவளை)
10-30, 2-30. 6-00

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

பூ...
பூவா

## 19 நிபந்தனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம், இந்திய – இலங்கை ஒப்பந்தம் யாவுமே தமிழர்களை ஏமாற்றியுள்ளன—

ஜினதாச விஜிதபால (ஸ்ரீ ல சு கட்சி)— யோக சங்கரி போன்றவர்களை சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும் வேண்டாம—

யோக சங்கரி— நான் இங்கு உண்மைகளையும், துன்பங்களையும் எடுத்து கூறுகின்ற பொழுதே இப்படி உங்களால் சகிக்க முடியவில்லை என்றால் காலங் காலமாக கஷ்டங்களை அனுபவித்து வரும் தமிழ் மக்

## பிரேதம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்தது.

நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் மரணமான ஒருவரின் பிரேதத்தை, உறவினர்கள் வாகனம் ஒன்றில் வீட்டுக்கு கொண்டு சென்ற போதே இந்த விபத்து நேரிட்டது.

இதனால் வாகனத்தில் சென்

## தமிழீழப் பிரகடன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளின் நேர்மையான வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர்.

கள்ள வாக்குகளினால் குறுக்கு வழியில் இந்த சபைக்கு வந்தவர்கள்.

இதைப் போன்றே வடக்கு கிழக்கு மாகாண சபையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இன்று ஈ பி ஆர் எல் எப் இயக்கமும் அதன் தலைவர்களும பொது மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டனர். செல் விரும்புகிறேன்.

எமது தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்ட புலிகள் இயக்கம் ஜனாதிபதி திரு பிரேமதாசவுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

உயர் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் ஏ சி எஸ் ஹமீது எமது அமைப்புகளுடன் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். தமிழர்களின் உண்மையான பிரச்சினைகளை அவரிடம் கூறி உள்ளோம்.

பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா மற்றும் டேடா குடும்பத்தினர், மாமா குடும்பத்தினர், உறவினர்கள் இவரை இறைவன் அருளைப் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்-

## தினபதி
## சிறு விளம்பரம்

### சேல்ஸ்மன் தேவை

புடைவை வியாபாரத்தில் நல்ல அனுபவமுள்ள சேல்ஸ்மன் தேவை- சான்றிதழ்களுடன் நேரில் வரவும்- மூஸமமில்ஸ் ட்ரேட் சென்டர், 377, பிரதான வீதி, பாணந்துறை-

சி இ 032223

### மரண அறிவித்தல்

மட்டக்களப்பு, கல்லடி உப்போடை, "தவகிரி"யில் வசமிருந்த குணரத்தினம் பிள்ளை தம்பிப்பிள்ளை அவரத 95 வத வயதில் 27-2-90 அன்று கொழும்பில் காலமானார்- அவர் விருமபியிருந்தத போல் அவரின் பூதவுடல் 28-2-90 அன்று சைவ முறைப்படி தகனம் செய்யப்பெற்றது- நண்பரும உறவினரும இச்செய்தியை ஏற்றுக் கொள்ளவும்-

31/4 ஏ, சீ அவென்யு,
கொழும்பு-3.

03279!

ணம-
சபாநாயகர்- இது விவாதத்திற்கு அப்பாற்பட்ட விடயம தயவு செய்த பேசுபவரைக் குழப்ப

## புதிய சாப்பு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
ச்சரவை தீர்மானித்தமையும தொர்ந்ததே-

இதன்படி கொழும்புக்கும புறநகர பிரதேசங்களுக்கும இடையே மாலை 6 மணிக்குப் பின்னர் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு போக்குவரத்து சபைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்று மேற்படி அதிகாரி தெரிவித்தார்-

எவ்வாறாயினும் சபைகளிடம போதிய பஸ்கள் இல்லாமை பெரும பிரச்சினையாக இருக்கிறது என்று அவர் மேலும தெரிவித்தார்-

மாலை 6 மணிக்குப் பிறகு கூடுதலாக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு கொழும்பு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களை தாம பணித்துள்ளதாக தனியார் பஸ் போக்குவரத்துப் பணிப்பாளர் திரு என் ஏ எச் டபிள்யூ மெண்டிஸ் தெரிவித்தார்-

இரவு நேர பஸ் போக்குவரத்தை கண்டு கூடுதலான மக்கள் இரவு நேர பயணங்களில் ஈடுபடுவர்- அந்த மக்களின் எண்ணிக்கை அதிகரிக்குமபோது பஸ் உரிமையாளர்களும மேலும பஸ்களை இரவில் சேவையில் ஈடுபடுத்த முன் வருவர்-

எனவே பஸ் சேவை முன்னேற்றத்திற்கு சற்று காலம செல்லும-

இப்படி திரு மெண்டிஸ் தெரிவித்தார்- (ண—ற)

கேட்கப் போகிறீர்கள்?

பல குறுக்கீடுகளின் பின் தனது பேச்சைத் தொடர்ந்த திரு யோகசங்கரி மேலும கூறியதாவது—

ஈழம பற்றி நான் இங்கு பேசவில்லை- வடக்கு, கிழக்கு மாகாண சபை பற்றித்தான் பேசுகிறேன்-

வடக்கு, கிழக்கு மாகாண சபை தனக்கென்று ஒரு படையை வைத்துக் கொண்டு மோதலை ஏற்படுத்தவில்லை என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்-

பொருளாதார சீரழிவு, அராஜக தாண்டவம என்பனவற்றால் நாடு பல பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும போது இனியாவது தமிழ் மக்களும இந்நாட்டு மக்கள் என்ற எண்ணத்தோடு வாழ வழி விடுங்கள் என்று கூறி இந்த விவாதத்தில் இருந்து நாங்கள் (ஈ பி ஆர் எல் எப்) ஒதுங்கிக் கொள்கிறோம-

— இவ்வாறு திரு யோக சங்கரி கூறினார்-

(ண-கு)

## நாட்டு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
நிர்மாணத்துறை அமைச்சர் திரு சிறிசேன குரே மற்றும இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் ஆகியோரும இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்-

நாட்டுக்கு அமைதியும சமாதானமும் வேண்டியே இந்த யாகம நடைபெறவிருக்கிறது-

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளின் அருள் ஆசியுடன் காயத்திரி சித்தர் ஆர் கே முருகேசு சுவாமிகளின் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெறும-

(ண—ற—265)

இவர்கள் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ண-வ)

## ஹமீதுடன்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
என்றும் அதன் மூலம ஐக்கிய இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியைக் காண முடியும் என்றும அப்போது ஜனாதிபதி அவர்களிடம தெரிவித்திருந்தார்,

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைதியை நிலை நாட்டுவதில் தமது கட்சி பூரண ஆதரவை அளிக்கும என மாத்யா அப்போது தெரிவித்திருந்தார்.

(ண-ற)

## 5000...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
சைட் ஆகிய 4 தோட்டங்களிலேயே வேலை நிறுத்தம நடைபெற்று வருகிறது-

இ தொ கா மற்றும இ தே தோ தொ ச ஆகியவற்றை சேர்ந்த சகல தொழிலாளர்களும வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்-

சம்பந்தப்பட்ட தோட்டத் துரையை இடமாற்றம் செய்யுமாறு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்

இந்த விவகாரம தொடர்பாக இ தொ கா நுவரெலியா மாநில இயக்குநர் திரு எஸ் அருள்சாமி - உதவிச் பொதுச் செயலாளர் திரு ரீ வி சென்னன் மற்றும அரசியல் அமைப்பாளர் திரு வி ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேற்று மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்

(ண-ற-265)

வாக்கை இழந்து விட்டனர். செல்வாக்கையும சுய கௌரவத்தையும இழந்த நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியான நிலையிலேயே இவர்கள் தன்னிச்சையான ஈழப் பிரகடனத்தை செய்துள்ளனர். இந்தப் பிரகடனத்திற்கும தமிழ் பேசும மக்களுக்கும எந்த விதமான தொடர்பும இல்லை. எமது மக்கள் அதனை ஏற்கவில்லை.

திரு வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனம 1990 ஆம ஆண்டின் சிறப்பான ஒரு ஜோக் என்றே கூற வேண்டும.

இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும 35 லட்சம தமிழ் மக்களும தமிழீழ விடுதலைப் புலிகளையே தமது ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கவும தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும கூடிய ஒரே ஒரு பலமான சக்தி புலிகள் இயக்கம ஒன்றே என்று எமது மக்கள் அங்கீகரித்து விட்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு நேரடியாகச் சென்று பார்த்தால் உண்மை விளங்கும.

ஆண்டாண்டு காலமாக இலங்கை, இந்திய இராணுவத்தினராலும், மாற்று இயக்கங்களினாலும தன்புறுத்தப்பட்டு வந்த எமது தமிழ் மக்கள் இப்பொழுது நிமமதிப் பெருமூச்சு விடுகின்றனர். அவர்கள் அமைதியாகவும சுதந்திரமாகவும நள்ளிரவு 12 மணி வரையிலும கூட நடமாடுகின்றனர்.

புலிகள் மீது நமபிக்கை வைத்துள்ளனர் இப்பொழுது எமது பகுதியில் கொலைகள் இல்லை கொள்ளைகளும இல்லை என்பதை இங்கு கூறிக் கொள்ள கம கூறினார். (ண-ய)

அமைதியான பேச்சுவார்த்தைகளின் மூலம தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டுள்ளது.

இப்படியான நிலையில் அதனை சிதறடிக்கும நோக்குடனேயே திரு வரதராஜப் பெருமாள் சுயமாக ஈழப் பிரகடனம செய்துள்ளார்.

இது சுயநல நோக்குடன் செய்யப்பட்டதேயன்றி தமிழர்களின் மீது கொண்ட பற்றினால் அல்ல.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா புலிகள் இயக்கத்தை வன்மையாகக் கண்டித்தார். வரிகள் அறவிடப்படுவதாக குறிப்பிட்டார். ரோகண விஜேவீரவைப் போன்று மாட மாளிகை கட்டப் போகின்றனரே என்றும சந்தேகம எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவியின் கூற்றை நான் வன்மையாக கண்டிக்கிறேன், தமிழீழ விடுதலைப் புலிகள் இலட்சியவாதிகள். ஒரு உயர்ந்த இலட்சியத்துடன் போராட்டம நடத்துபவர்கள்- அவர்களை விஜேவீரவுடன் ஒப்பிடக் கூடாது-

தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும, சுதந்திரத்திற்காகவும புலிகள் இப்போது அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடியுமானால் அது தனிப்பட்ட ஒரு குழுவினரின் போராட்டமாக இருக்காது. 35 லட்சம தமிழ் மக்களின் ஒன்றுபட்ட போராட்டமாகவே அமையும என்பதை இப்போதே கூறி வைக்க விரும்புகிறோம-

— இப்படி திரு பரராஜசிங்கம கூறினார்.

பூந்திருக்கு
(கலர்)

12 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
செல்லமஹால்
(கொழும்பு)
2-30, 6-00, 9-30
ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த
## ராஜாதி ராஜா
(கலர்)

13 வது வாரம
ஜெஸிமா
(கிராண்ட்பாஸ்)
2-30, 6-00, 9-30
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
துசித
(பேராதனை)
10-15, 1-15, 3-30
நில்மினி
(வத்தளை)
10-30, 2-30, 6-00
கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த
## வருஷம் 16
(கலர்)

# படவிழாவில் ரசிகர் ஒருவர்

## என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டார்

### பேட்டியில் ரேகா



ரேகா

பிறந்தால் நடிக்க வேண்டும் யார் யாருக்கு என்ன என்று இறைவனால் விதிக்கப்பட்டிருக்கிறதோ அதன்படிதான் எல்லாமே நடக்கும்.

விதியை நம்புகிறவள் நான். அதனால் தான் எது நடந்தாலும் அது இறைவன் விதித்த விதிப்படி நடக்கிறது என்று எண்ணிக் கொள்ளுவேன்.

நடிகை ரேகா பேட்டி ஒன்றின் போது இப்படிக் கூறினார். அவர் மேலும் பேட்டியளிக்கையில் அறிவாளியோ, அரசியல்வாதியோ சென்றால் அவர்கள் பின்னால் பத்துப் பேர்கள் போக மாட்டார்கள்.

நடிகை நடிகர்கள் என்றால் அவர்களுக்குப் பின்னால் பத்துப் பேர் போவார்கள். நடிகர்களுக்கு மதிப்பு அதிகம் "பிள்ளைக்காக" படத்தின் பாராட்டு விழா குருநாகலில் நடந்தது.

ஒரு ரசிகர் என்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தார். ஆனால் இந்த ரசனையை நான் விரும்பவில்லை நம்மிடம் ஒருவர் நெருங்கும் பொழுது சும்மா இருந்தால் மேலும் நெருங்குவார்கள்.

முதலில் மேலே கையை வைக்கும் பொழுதே "எடுடா கையை" என்று சொன்னால் போதும், அடுத்த முறை அவன் ஒழுங்காக அக்கா தங்கையோடு பழகுவது போல் பழகுவான். இது தான் இன்றைய சமுதாயம்.

நான் எனக்கு யாரையும் போட்டியாக நினைப்பது இல்லை. அந்தப் படத்தில் அந்த நடிகை நடித்து விட்டாளே என்றும் பொறாமைப்படுவதில்லை. ஆனால் நடிப்பில் போட்டி போட்டுக் கொண்டு நடித்து நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கை என்றும் விரும்புகிறேன்.

நான் நடித்த "பிள்ளைக்காக" "என் புருஷன்தான் எனக்கு மட்டுந்தான்" என்னுடைய நடிப்புக்குக் கட்டியம் கூறின. பத்திரிகைகளும், ரசிகர்களும் என்னை வெகுவாய் பாராட்டினார்கள். எனக்கு டைரக்டர்கள் நல்ல கேரக்டர் கொடுத்தால் என்னுடைய திறமையை எடுத்துக் காட்டுவேன்.

புது வீடு கட்டி அதில் குடி புகுந்தேன். எனக்கு பட வாய்ப்புகள் குறைந்தன. அதிஷ்டம் இல்லாத வீடு என்று பலர் சொன்னார்கள். முதலில் அதில் நம்பிக்கை இல்லை. சொல்லுகிறவர்கள் சொல்லட்டும் என்று சும்மா இருந்தேன். நாளுக்கு நாள் பட வாய்ப்பு தேய்பிறையாக மாறவே அந்த வீட்டை விட்டு பழைய வீட்டுக்கே வாடகைக்குப் போனேன். அங்கு போனவுடன் தான் "என் புருஷன்தான் எனக்கு மட்டுந்தான்" பட வாய்ப்பு வந்தது. நடித்தேன், புகழ் பெற்றேன். அதைத் தொடர்ந்து இன்று பல படங்களில் நடித்து வருகிறேன்.

"செண்பகமே செண்பகமே" படத்தில் என் தொண்டைக்குள் ராமராஜன் நாக்கினால் உறிஞ்சுவது போல் எடுக்கப்பட்ட காட்சி உண்மையில் எடுக்கப்பட்டது இல்லை. ஒரு "கையை" மறைத்து அந்த "ஷாட்டை" டைரக்டர் எடுத்தார். ஆனால் புன்னகை மன்னன் படத்தில் உண்மையிலேயே கமல் முத்தம் கொடுத்தார்.

ஐம்பது நாட்கள் படப்பிடிப்பு இல்லாமல் இருந்த பொழுது நான் என் அம்மா ஊருக்குச் சென்று மீன் கறியை விதவிதமாக ஆக்கி வைத்துச் சாப்பிட்டேன்.

எங்கள் வீட்டில் வேலைக்காரி கிடையாது எல்லா வேலைகளையும் நானும் அம்மாவுந்தான் செய்வோம். இதை நான் கௌரவக் குறைவாகக் கருதுவதில்லை. மேலை நாட்டில் அவர்கள் வேலையை அவர்களே செய்து கொள்ளுகிறார்கள்.

"மூன்றாம்பிறை"யில் ஸ்ரீதேவி நடித்ததைப் போல், "பசி"யில் ஷோபா நடித்ததைப் போல் "மீண்டும் ஒரு காதல் கதை"யில் ராதிகா நடித்ததைப் போல் நடிக்க விரும்புகிறேன்.

அரசியலில் ஈடுபட மாட்டேன் ஆனால் அரசியல் பேசத் தெரிந்து கொள்வேன்.

"பிள்ளைக்காக" "செண்பகமே செண்பகமே" படத்தில் கிளிசரின் போடாமல் அழுது நடித்து இருக்கிறேன்

ஆனால்—



மலேரியாவை ஒழிக்க

# மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலை அறிமுகம்

## சுகாதார கல்விப் பகுதி நடவடிக்கை

அக்குறணை மார்ச் 5

நுளம்புத் தொல்லையில் இருந்து விடுபட புதிய ஒரு திட்டத்தை அமுல் செய்வதற்கு மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் சுகாதார கல்விப் பகுதி முன் வந்துள்ளது.

தற்போது இலங்கையில் நுளம்புகளால் ஏற்படும் மலேரியா நோயை கட்டுப்படுத்தவும் இவ்வாறான நுளம்புகளால் பரவும் வேறு பல நோய்களை தடுக்கவும் உதவும் வகையில் புதிதாக மருந்து (நாசனி) ஊட்டப்பட்ட நுளம்பு வலைகளை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறைந்த விலையில் இலகுவாக தயாரித்துக் கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ள இம் மருந்த ஊட்டப்பட்ட நுளம்பு வலைகளுக்கு பாவிக்கப்படும் நாசனி மனிதர்களுக்கு எவ்வித கேடும் செய்யாது என தெரிவிக்கப்படுகின்றது.

மலேரியா, யானைக்கால் நோய், டெங்கி, ஜுரம், ஜெப்பனிஸ் என்செபலய் டஸ், போன்ற பல்வேறு நோய்களை ஏற்படுத்தும் நுளம்புகளை கட்டுப்படுத்தி அழித்தொழிக்கும் தன்மை கொண்டதாக இப்புதிய நுளம்பு வலைகள் தயாரிக்கப்பட்டுள்ளவாம.

கட்டில்களில் மட்டுமல்ல, நிலத்தில் படுத்து உறங்குவோருக்கும் இந்த மருந்து ஏற்றிய நுளம்பு வலைகளை பயன்படுத்த முடியும் இந்த நுளம்பு வலைக்குள் மூன்று பேர் சாதாரணமாக உறங்க முடியும். இந்த வலைக்குள் செலுத்தப்படும் மருந்துநாசனி ஆறு மாத காலத்துக்கு செயலாற்றும் தன்மை கொண்டது.

இந்நுளம்பு வலைகள் தயாரிப்பு, மருந்து செலுத்தல், பாவிப்பு முறைகள், பயன்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்குமுகமாக, இந்த மருந்தூட்டிய நுளம்பு வலைகள் பற்றிய பொது வேலைத் திட்டம் ஒன்று தற்போது கண்டி மாவட்டத்தில் உள்ள கலகெதர சுகாதார சேவை அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ல—411)

# பஸ் உதிரிப்பாகங்கள் இறக்குமதியாகும்

கொழும்பு, மார்ச் 6

பஸ்களுக்கு தேவையான புதிய உதிரிப்பாகங்கள் இன்னும் இரண்டு வார காலத்தில் இறக்குமதி செய்யப்படும்.

போக்குவரத்து அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தெரிவித்தார்.

பஸ்களுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் இன்மையால் சுமார் இரண்டாயிரம் பஸ்கள் கட்டையேறியுள்ளன என்று அண்மையில் தினபதி பத்திரிகை தலைப்புச் செய்தியாக வெளியிட்டமை தெரிந்ததே.

இந்த பஸ்களுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளன.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச திறைசேரியிலிருந்து பெற்றுக் கொடுத்த பத்து கோடி ரூபா இதற்காக பயன்படுத்தப்படும் என்றும் திரு மெண்டிஸ் கூறினார்.

(ல—வ)

# முஸ்லிம் பாடசாலை அதிபர்கள் 600 பேர் பங்கு பற்றும் கருத்தரங்கு

## 10, 11 ஆம் திகதிகளில்

கொழும்பு, மார்ச் 6

600 முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்கள் பங்குபற்றும் இருநாள் கருத்தரங்கு ஒன்று கொழும்பில் நடைபெறும்.

"கல்வி முகாமைத்துவமும், பாடசாலை நிர்வாகமும்" என்ற தலைப்பில் இக்கருத்தரங்கு மார்ச் 10, 11 ஆகிய இரு தினங்களிலும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

முஸ்லிம் கல்வி மாநாட்டின் வெள்ளி விழா நிகழ்ச்சியின் சம்பிரதாயபூர்வ அங்குரார்ப்பணத்தை முன்னிட்டே இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

கல்வி, கலாசார தகவல்துறை அமைச்சும், தேசிய கல்வி நிறுவனமும், கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவும் இதனை ஏற்பாடு செய்துள்ளன.

இக்கருத்தரங்கில் முஸ்லிம் பாடசாலை அதிபர்களும், கல்வி அதிகாரிகளும் பங்குபற்றுவர்.

இவ்வாறு முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிர்வாக சபைத் தலைவர் ஜனாப் எஸ் எல் எம் ஷாபி மரிக்கார் தெரிவித்தார்.

சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது தலைமையில் வெள்ளி விழா அங்குரார்ப்பண நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

கல்வி, கலாசார தகவல்துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம் லொக்கு பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

(ல—007)

EDGRO எட்குரே



"...நீ ஒரு குழந்தை அத னால்தான் உன்னை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு நடிப்புப் பாடம சொல்லித் தருகிறேன்" என்று புதுமுகம அஞ்சனாவி டம சொல்கிறாரே.ா பிரபு! படம- சத்திய வாக்கு ல—10]

ஆனால்—

எனக்குத் தெரிந்த ஒருவருக்கு குழந்தை ... ஆண்டுகள் பல தவம இருந்து அரச மரங்களையெல்லாம சுற்றி எல்லா கோவில்களுக்கும சென்று பத்து ஆண்டுகள் கழித்து அழ கான ஆண் குழந்தை பிறந்தது குழந்தை பிறந்த பதினைந்து நா—கள் கழித்து அந்தக் குழந்தை இறந்து விட்டது— இந்த நிகழ்ச் சியை அந்தத் தாய் என்னிடம சொன்ன பொழுது என் கண்கள் குளமாகி விட்டன—

இவ்வாறு ரேகா கூறினார்—

(ல-10)

## எஸ். எஸ். ஆர். மீண்டும் நடிக்கிறார்

ஐஸ்வர்யா பிலிமஸ் வழங்க அன்பாலயா பிலிமஸ் கெ பிரபா கரன் தயாரிக்கும "தங்கத்தின்



எஸ் எஸ் ஆர்

தங்கம" படத்தில் நீண்ட கால இடைவெளிக்குப் பின் எஸ் எஸ் ராஜேந்திரன் நடிக்கிறார்—

"எங்களோட தங்கம தங்க முத்து அண்ணன்" என்ற பாடல் காட்சியில் ராமராஜனை பார்த்து

# திகில் படத்தில் சித்ரா நாயகி

பாண்டியன் — சித்ரா ஜோடி யாக நடிக்கும திகில் படத்தை குன்னக்குடி வைத்திய நாதன் டைரக்டு செய்கிறார்—

பிரபல இசை அமைப்பாளர் குன்னக்குடி வைத்தியநாதன் நாதாலயா பட நிறுவனம சார் பில் உருவாகும படம "உலா வந்த நிலா"

இப்படத்தின் இசை, தயாரிப்பு, இயக்கம ஆகிய பொறுப்புகளை குன்னக்குடி வைத்தியநாதன் ஏற் றுள்ளார்— கிர்த்திராதா ஒளிப்ப திவு செய்கிறார்— தாஸ் கதை எழுத பத்மம் வசனம எழுதுகி றார்— வைரமுத்து பாடல்கள் எழுதுகிறார்—

ஒரு நல்ல குடும்பம பேய் ஒன்றினால் அலைக்கழிக்கப்பட்டு பலத்த போராட்டத்துக்கு பிறகு ஒன்று சேர்வதே படத்தின் மூல கிய கதை— படத்திற்கான தந்திர காட்சிகளையும சிறப்பு ஒளிப்ப திவையும விபின்தாஸ் ஏற்று

கிராம மக்கள் ஆயிரம பேர் பாடி ஆடிய காட்சிகள் படமா னது

இதில் ராகசுதா கதாநாயகி யாக நடிக்கிறார் மற்றும கவுண் டமணி, செந்தில், பிரபாகரன், அனந்தராஜ், ராபர்ட், ஜெய பாரதி, மாதுரி, மோகனப்பிரியா வும நடிக்கிறார்கள்—

...பாரதி கதை வசனம எழுதுகிறார்— பி எஸ் லோகநா தன் ஒளிப்பதிவு செய்கிறார்— எஸ் ஏ ராஜ்குமார் பாடல்கள் எழுதி இசை அமைக்கிறார்— திரைக் கதை டைரக்ஷன் சிராஜ்—

(ல-10)

தினபதி சினிமா


## எடகுரே வீட்டு நீர் இறைக்கும் பம்புகள்

இத்தாலிய, பெட்ரொல்லோ நிறுவனத்துடன் கூட்டாய் இணைந்து தயாரிக்கப்பட்டது குறைந்த செலவில் அதிகளவு நீரை இறைக்கிறது.

எடகுரே நீர் இறைக்கும் பம்புகள் தரை மட்டத்திலிருக்கும் நீர்த்தாங்கிகள், கிணறுகள் மூலம் தடங்கலேதுமின்றிச் சீராய் நீரை இறைத் துக் கொடுக்கின்றன. மேலே அமைக்கப்பட்டுள்ள நீர்த் தொட்டிகளை எப்பொழுதும் நிரம்பிய நிலை யிலேயே வைத்திருக்கின்றன. பெட்ரொல்லோ மின்சார மோட்டார்கள் அதி நவீன தொழில் நுட்ப உத்திகளுடன் ஈடிணையற்ற இத்தாலிய வடிவமைப்பில் உருவானவை தனித்துவமான பல சிறப்பம்சங்களைக் கொண்டவை அவற்றின் இயக்கச்செலவுகள் ஆகக்குறைந்த மட்டத்தி லேயே இருக்கின்றன




விசேஷ அனுகூலங்கள்

- குறைவான மின்சார பாவனை
- வோல்ட்டேஜ் ஏற்ற இறக்கங்களுக் கெதிரான தன்னியக்கப் பாது காப்பு
- மோட்டாரின் உடல் பாகம் விரை வில் துளிரடையும் விதத்தில்

விசேஷ முறையில் உருவாக்கப் பட்டுள்ளது

- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனையின் பின்னர் நம்பக மான சேவை. நாடெங்கிலும் இருக்கும் வியாபாரிகளிடமும் விற்பனை நிலையத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

EDNA

எடனா எஞ்சினியரிங் (பிரைவட)லிமிடெட்,

160 பெளத்தாலோக மாவத்த. கொழும்பு 4

தொலைபேசி 502291-3 588281 586860

விலை ரூபா 4190/- முதல்

| | | | |
|---|---|---|---|
| எடகுரே CPm 130 | 0.5 குதிரை சக்தி | 72 அடி |
| எடகுரே CPm 152 | 0.4 கு ச | 108 அடி |
| எடகுரே CPm 158. | 1.0 கு ச | 114 அடி |

ஆழ் கிணற்று பாவனைக்கு உகந்த விதத்தில் வடிவமைக்கப்பட்டது.

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4427
— 1990 மார்ச் 7 —

# சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர் குறை தீரும்

## அவர்களுக்கென ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க அமைச்சர் இணக்கம்

நலிந்த போயிருந்த சிறிய தேயிலை சொந்தக்காரர்களின், தேயிலை ஏற்றுமதிப் பிரச்சினையை தீர்த்து வைக்க அரசு முன் வந்துள்ளது,

சிறிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்கள் ஒன்றுகூடி தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமுகமாக நிறுவனமொன்றை செயல்படுத்தவுள்ளனர்,

சிறிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்கள் பெருந்தோட்டத்துறை அமைச்சர் திருகாமினி திசாநாயக்காவை கடந்த வாரம சந்தித்தனர்,

அப்பொழுது இத்தீர்மானம ஏற்றுக்கொள்ளப்பட்டது,

நாட்டில் உற்பத்தியாகும தேயிலையில் மூன்றில் ஒரு பங்கை சிறிய தேயிலைத் தோட்டங்களே உற்பத்தி செய்கின்றன.

இருந்தும அத்தகைய தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை,

சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களின் புதிய நிறுவனம, தேயிலை உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்ய உதவிகளை அளிக்கும,

சிறிய தேயிலை தோட்டச் சொந்தக்காரர்கள் நான்கு குழுவினராகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள்,

சிறிய தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும தேயிலையை ஏற்றுமதி செய்வது, பெரும பிரச்சினையாக இருந்து வந்தது,

இதனை நேரடியாக ஏற்றுமதி செய்யமுடியாது, பலரின் ஆதரவுகள் அத்தியாவசியம, இதனால் ஏற்றுமதி செய்யும் திகதிகள் தாமதம் அடையும,

தரகர்கள் பலர் மூலமாகவே ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது. இதனால் ஆதாயம குன்றியது.

இமமுறையை மாற்றியமைக்க புதிய நிறுவனம் ஆவனசெய்யும,

பாழடைந்த கிடக்கும தேயிலைத் தொழிற்சாலைகள், புனரமைக்கப்படல் வேண்டும, இவைகளுக்கு பதிலாக புதிய தொழிற்சாலைகள் நிறுவப்பட முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும.

உரமான்யம் ரத்துச் செய்யப்பட்டதால் சிறிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்கள் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனை நிவர்த்தி செய்ய ஆவன நடவடிக்கைகள எடுக்கப்பட வேண்டும என்று வலியுறுத்தப்பட்டது,

சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கென காப்புறுதி திட்டமொன்றை செயல்படுத்த வேண்டும, கடுமையான வரட்சியினாலோ அல்லது இயற்கைக்கு மாறான சோதனைகளினாலோ பாதிக்கப்படும காலங்களில் கைகொடுத்து உதவ முன் வரவேண்டும.

நஷ்டத்தில் ஓடும சிறிய தேயிலைத் தோட்டங்களை அரசாங்கம் கையேற்கவேண்டும என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களின் தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யும என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது, (ம—455)

## பல்கலையிலும் துரப்படுத்தலா?

மாணவர்கள் மத்தியில் அமைதி இல்லாத காரணத்தால் சுமார் இரண்டு வருடங்கள் பல்கலைக் கழகங்கள் மூடிக் கிடந்தன.

பகீரதப் பிரயத்தனம செய்து சிறிது காலத்துக்கு முன்னர்தான் பல்கலைக் கழகங்கள் மீண்டும திறக்கப்பட்டன.

இப்போது அவை சீராக இயங்கி வருகின்றன.

அரசாங்கம மேற்கொண்டுள்ள ஒரு முடிவு அந்த நல்ல நிலைமையைக் கெடுத்து விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

நாட்டில் உள்ள நான்கு பல்கலைக் கழகங்களைத் தேசிய பல்கலைக் கழகங்களாக்குவது என்றும மற்றப் பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றையும பிரதேச பல்கலைக் கழகங்களாக்குவது என்றும அரசாங்கம முடிவு செய்திருக்கிறது.

இதன்படி கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம, றுகுணு பல்கலைக் கழகங்கள் தேசிய பல்கலைக் கழகங்களாக்கப்படும, மற்றவை எல்லாம பிரதேச பல்கலைக் கழகங்களாக இருக்கும.

அரசாங்கத்தின் இந்த முடிவை பல்கலைக் கழக உபவேந்தர்களே எதிர்க்கிறார்கள்.

உயர் கல்வி அமைச்சர், ஜனாப் ஏ சி எஸ் ஹமீதைச் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.

பல்கலைக் கழக செனட் சபைகளும அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக் கொள்ளும நிலையில் இல்லை அவை

## புத்தளம் சாஹிரா கல்லூரியிலுள்ள

# 50 மாணவர்கள் இராணுவப் பயிற்சி பெறுவர்

புத்தளம, மார்ச் 5

புத்தளம சாஹிரா தேசியக் கல்லூரியிலிருந்து 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இராணுவப் பயிற்சியும காவல் துறைகளில் தேர்ச்சியும் வழங்கப்படுவதுடன் தொழில்நுட்பத் துறையில் சிறந்த பயிற்சியும் வழங்கப்படும—

புத்தளம் இராணுவப் பயிற்சி முகாமைச் சேர்ந்த பிரிகேடியர், சில்வா இவ்வாறு தெரிவித்தார்

வட மேல் மாகாண சபையின் புத்தளம பிரதி டாக்டர் ஐ எம இல்யாசின் வீட்டில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது— இதில் புத்தளம இராணுவப் பயிற்சி முகாமைச் சேர்ந்த பிரிகேடியர் சில்வா, கேணல் பொடி மாஹத்தயா டாக்டர் ஐ எம இல்யாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

...ர்பாக கலந்துரையாடப்பட்டன

இவ் வேளையிலேயே பிரிகேடியர் சில்வா இந்த முடிவையும பிரஸ்தாபித்தார்— அவர் மேலும தெரிவித்ததாவது:—

பயிற்சிக்காக தெரிவு செய்யப்படும் 50 மாணவர்களுக்கும மூன்று மாத காலம பயிற்சி அளிக்கப்படும்—

முறையாக பயிற்சியை முடித்த பின் இவர்களுக்கு அரசிலோ, அல்லது தனியார் துறையிலோ தொழில் வாய்ப்பு வழங்க வசதி செய்து கொடுக்கப்படும்—

இவ்வாறு அவர் கூறினார்

தற்சமயம் பயிற்சிக்குத் தேவையான 50 மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதும பயிற்சிக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும

இதனை டாக்டர் ஐ எம இல்யாஸ் தெரிவித்தார்—

# மல்வானையில் மின் விநியோகம் சீராகும்

### — அஸ்வர்

கொழும்பு, மார்ச் 6

மல்வானையில் மின்சார விநியோகம சீர்செய்யப்படும—

இதற்கான நடவடிக்கைகள், ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாக அரசாங்க உதவி கொறடா அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் எம பி தெரிவித்தார்—

மூன்று வாரங்களில் இந்த மின்சார விநியோகப் பணிகள் சீர்செய்யப்படும என்று மின்சார சபையின் மேல் மாகாண வடக்கு பகுதி பிரதிப் பொது முகாமையாளர் தமக்கு அறிவித்து இருப்பதாக அஸ்வர் மேலும கூறினார்—

வேல்கம கோவிலுக்கு அருகில் புதிய மின்சார உப நிலையம ஒன்றை அமைக்கவும உத்தேசிக்கப்பட்டு உள்ளது—

நிதி ஒதுக்கீட்டுடன் அல்முபாரக் மின்சார உபநிலையத்துக்கு 250 கிலோ வாட்ஸ் மின்சாரம வழங்கப்படுமென்றும பிரதிப் பொது முகாமையாளர் மேலும தெரிவித்திருக்கிறார்—

மல்வானையில் மின் சீர்கேடு தொடர்பாக சுட்டிக்காட்டிய "தினபதி"க்கும ஹாஜி அஸ்வர் நன்றி தெரிவித்திருக்கிறார்—

தொடர்பாக அல்ஹாஜ் அஸ்வர், மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேராவிடம பிரஸ்தாபித்து இருந்தார்— (ந—007)

# சர்வதேச...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் திருமதி வனித்தா ஜயசிங்க இத்தகவலை அந்த மாநாட்டில் தெரிவித்தார்.

சேவா வனிதா இயக்கத்தின் தலைவியான திருமதி ஹேமா பிரேமதாச, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், வட மத்திய மாகாண சபையின் உறுப்பினர் திருமதி ராணி, அதிகாரி உட்பட சேவா வனிதா இயக்கத்தின் உறுப்பினர்கள், பலர் இமமாநாட்டில் கலந்து கொண்டனர்,

மாநாட்டில் திருமதி ஹேமா பிரேமதாச கூறியதாவது—

இம்முறை சர்வதேச மகளிர்

கொடிகள் நாடளாவிய ரீதியில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

இந்தக் கொடி விற்பனை மூலம கிடைக்கும் வருமானத்தினால் சுதந்திர வர்த்தக வலயத்தில் கடமை புரியும யுவதிகளுக்காக விடுதி ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது—

பால்மாவின் விலையேற்றத்தினால் தாய்மார் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே குழந்தைகளுக்காக புதிய பால்மா அறிமுகப் படுத்தப்பட்டது; "விட்டாஸ்பிறே" என்ற இந்த புதிய பால்மா விலை குறைந்த போஷாக்கு நிறைந்த பாலாகும, 400 கிராம எடையுள்ள ஒரு

## செய்தித் திரட்டு

### இராணுவ முகாம் அகற்றப்பட்டது

கொழும்பு, மார்ச் 6

பண்டாரவளை நகர மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம அகற்றப்பட்டு விட்டது,

ஏறக்குறைய இரண்டு வருட காலம பண்டாரவளை நகர மண்டபத்தில் இராணுவ முகாம அமைந்து இருந்தது. இது அகற்றப்பட்டதனால் பொது மக்களுக்கு பல்வேறு வழிகளில் நன்மை ஏற்பட்டுள்ளது. (ஐ—039)

### ரூ. 22 லட்சம் நிதி ஒதுக்கீடு

அக்குறணை, மார்ச் 5

மத்திய மாகாணத்தில் உள்ள தோட்டப் பாடசாலைகளில் நிலவும மரத் தளவாட உபகரணத் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக "சீடா" உதவித் திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள சுமார் இருபத்து இரண்டு லட்சம் ரூபாவை கல்வி அமைச்சு மத்திய மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஒதுக்கியுள்ளது, (ஐ—411)

### இந்த வருடம் 96 பேர் தெரிவு

கோப்பாய், மார்ச் 5

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயற்படும இராமநாதன் நுண்கலைப் பிரிவுக்கு இந்த வருடம் 96 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

கடந்த வருடம் செப்டம்பர் மாதம நடைபெற்ற நேர்முகப் பரீட்சை மூலம

சபைகளும் அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. அவை விரைவில் கூடிப் பேச இருக்கின்றன.

பல்கலைக் கழக விரிவுரையாளர் சம்மேளனமும் அரசாங்கத்தின் முடிவில் அதிருப்தி கொண்டுள்ளது. விரைவில் நடைபெறவிருக்கும் சம்மேளனக் கூட்டத்தில் அரசாங்கத்தின் முடிவு ஆராயப்பட்டிருக்கிறது.

பல்கலைக் கழக மாணவர்கள் பெற்றோர் ஆகியோர் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

பல்கலைக் கழகங்களைத் தேசிய பல்கலைக் கழகங்கள் என்றும் பிரதேச பல்கலைக் கழகங்கள் என்றும் வேறுபடுத்தத் தொடங்கினால் அவற்றிற்கிடையே அந்தஸ்தில் வித்தியாசம் வந்து விடுகிறது.

ஆனால் அரசாங்கம் இது பற்றி இன்னும் தெரிவிக்கவில்லை.

எல்லா மாணவர்களும் தேசிய பல்கலைக் கழகங்களில் சேர்ந்து படித்துப் பட்டம் பெறவே விரும்புவர்.

தேசிய பல்கலைக் கழகங்கள் வழங்கும் பட்டத்துக்கு பிரதேச பல்கலைக் கழகங்கள் வழங்கும் பட்டத்தை விட அதிக மதிப்புக் கிடைக்கும்.

ஆயின் பிரதேச பல்கலைக் கழகங்களை யார் நாடப் போகிறார்கள்?

இந்தச் சிறிய நாட்டுக்கு ஒரு பல்கலைக் கழகமே போதும். நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள நல்ல கல்லூரிகளை இணைப்புக் கல்லூரிகளாக்கி மாணவர்களைப் பல்கலைக் கழகப் பட்டப் பரீட்சைக்குத் தயார் செய்யும் பொறுப்பை அவற்றிடம் ஒப்படைக்கலாம்.

நாட்டின் ஒரே பல்கலைக் கழகம் எல்லா மாணவர்களுக்கும் பரீட்சை நடத்திப் பட்டங்களை வழங்கும்.

அப்படிச் செய்தால் ஒரு பிரச்சினையும் எழாது, உயர் கல்விக்கான அரசாங்கச் செலவும் குறையும்.

பல்கலைக் கழகத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு சுதந்திரக் கட்சி அரசாங்கம் தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்ததால் நேர்ந்த விபரீத விளைவுகளை மறந்து பல்கலைக் கழகங்களையே தரப்படுத்த முனைவதா?

உயர் கல்வியில் விஷப் பரீட்சைகள் வேண்டாம். அரசாங்கம் தனது முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

---

கேணல் பொடி மாஹத்தயா டாக்டர் ஐ எம் இல்யாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைதி சமாதான சமூக உறவு ஆகிய விடயங்கள் தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

இதனை டாக்டர் ஐ எம் இல்யாஸ் தெரிவித்தார்-

(இ-241)

---

மன்வாணையில் மின் சீர்கேடு தொடர்பாக சுட்டிக்காட்டிய "தினபதி"க்கும் ஹாஜி அஸ்வர் நன்றி தெரிவித்திருக்கிறார்-

மன்வாணை மின் சீர்கேடு

---

கொண்டனர்,

மாநாட்டில் திருமதி ஹேமா பிரேமதாச கூறியதாவது-

இம்முறை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு எமது சேவா வனிதா இயக்கம் நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலை திட்டங்களை செயல்படுத்தியது-

மார்ச் முதலாம் திகதி மகளிர் தினகொடி விற்பனை ஒன்றை எமது சேவா வனிதா இயக்கம் ஆரம்பித்தது. சுமார் 3 லட்சம்

அறிமுகப் படுத்தப்பட்டது; "விட்டாஸ்பிறே" என்ற இந்த புதிய பால்மா விலை குறைந்த போஷாக்கு நிறைந்த பாலாகும், 400 கிராம் எடையுள்ள ஒரு பைக்கட் பால்மாவை 38 ரூபா வீதம் விற்பனை செய்வது என உத்தேசிக்கப்பட்டிருக்கிறது, எதிர் வரும் தமிழ் சிங்கள புது வருடத்துக்கு முன்னர் இந்தப் பால் சந்தைக்கு விடப்படும்,

இம்மாதம் 3ஆம் திகதியன்று நாடளாவிய ரீதியில் பல ஆஸ்பத்திரிகள் புனரமைக்கப்பட்டன, சேவா வனிதா இயக்கமே இந்த புனரமைப்புப் பணிகளை மேற் கொண்டது-

இரத்ததானம், "பெண்கள் சக்தி" என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி என்பனவும் நடத்தப்பட்டன.

சேவா வனிதா இயக்கம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆற்றும் பணிகள் ஏராளம், எமது சேவைகளுக்கு பத்திரிகையாளர்களின் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் அவசியம் தேவை.

இப்படி திருமதி ஹேமா பிரேமதாச கூறினார், மகளிர் விவகார, சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தும் உரை நிகழ்த்தினார்.

(ண-வ)

---

வுக்கு இறந்த வருடம் 96 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சை மூலம் 96 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், நேர்முகப் பரீட்சைக்கு 400க்கு மேற்பட்டவர்கள் தோற்றி இருந்தனர்,

(ஐ-142)

---

# தமிழீழ பிரகடனத்துக்கு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நிலைமை மோசமாகி விட்டது-

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத அரசாங்கம் இந்திய அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது-

மாகாண சபைகளை உருவாக்கியது-

அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்தது-

இவை எல்லாவற்றையும் விட சட்டங்களை இயற்றும் அதிகாரங்களையும், மாகாண சபைகளுக்கு வழங்கி உள்ளது-

அரசாங்கத்தின் இந்தச் செயல்களை நாங்கள் ஆரம்பம் முதலே கண்டித்து வந்துள்ளோம்-

அதை நீங்கள் உதாசீனம் செய்து விட்டீர்கள்-

திரு வரதராஜப் பெருமாள் ஆரம்பத்திலிருந்தே வடக்கு, கிழக்கு மாகாண சபையை மாகாண அரசு என்றே அழைத்து வருகின்றார்-

தனது மாகாண சபைக்கு என தனியான தமிழ் தேசிய இராணுவத்தை அமைத்தார்-

இலங்கையின் குடிவரவு, குடியகல்வு சட்டங்களை உதாசீனப் படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார்-

இவற்றையெல்லாம் நாம் அவ்வப்போது சுட்டிக் காட்டினோம்- ஆனால் அரசு அவை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை-

இப்பொழுது வரதராஜப் பெருமான் தன்பாட்டில் தனி நாட்டையே பிரகடனப்படுத்தி விட்டார்- அது தொடர்பாக 19 நிபந்தனைகளையும் முன் வைத்துள்ளார்-

பிரகடனப்படுத்தி ஆறு தினங்கள் முடிந்து விட்டன- இந்த நிபந்தனைகள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை-

இந்த 19 நிபந்தனைகளில் அரசாங்கம் எத்தனை நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது? எத்தனை நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டன? இவற்றை அரசாங்கம் காலம் கடத்தாமல் வெளிப்படுத்த வேண்டும்-

உங்களுடைய அழைப்பை ஏற்று ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தினர் ஜனநாயக வழிக்கு திரும்பினர்- எனினும் இப்பொழுது நீங்கள் அவர்களைத் தனிமைப் படுத்தி விட்டு புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துகின்றீர்கள்-

இதனால் தமிழர்கள் தமிழர்களாலேயே கொல்லப்படுகின்றனர்-

புலிகள் இப்பொழுது அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளாகி விட்டார்கள்- வடக்கு கிழக்கு மாகாணத்தில் புலிகளின் ஆட்சியே நடைபெறுகின்றது-

இலங்கை இராணுவமும் பொலீஸாரும் முகாம்களிலேயே முடக்கி வைக்கப்பட்டுள்ளனர்- அவர்கள் வெளியே செல்வதற்கு புலிகளின் அனுமதியை பெற வேண்டுமாம்-

அண்மையில் உயர் கல்வி அமைச்சர் மட்டக்களப்பு சென்ற போது ஆயுதம் தரித்த புலிப் படை வீரர்களே மோட்டார் சைக்கிள்களில் பாதுகாப்பாக சென்றனர் என்று கூறப்படுகின்றது-

புலிகள் தமது அரசியல் எதிரிகளை மனிதாபிமானமின்றி கொன்று குவிக்கின்றனர்-

தொழில் புரிவோரிடம் வரி அறவிடுகின்றனர்-

வர்த்தகர்களிடம் கப்பம் வசூலிக்கின்றனர்-

ஒவ்வொரு வாகனமும் புலிகளினால் சோதிக்கப்படுகின்றது வாகனச் சொந்தக்காரர்களிடம் பணம் கறக்கப்படுகிறது-

வருமான வரியையும் அவர்களே பெற்று வருகின்றனர்-

இப்படியான கொலையாளிகளுக்கு உங்களுடைய அரசாங்கம் பரிந்து பேசுகின்றது-

அவசரகாலச் சட்டம் காரணமாக தென் பகுதியில் பொதுக் கூட்டங்களை நடத்த முடியாது- நோட்டீஸ்களைக் கூட ஒட்ட முடியாது-

ஆனால் வடக்கு கிழக்கில் புலிகள் பகிரங்கமாக கூட்டங்களை நடத்துகின்றனர்- அவர்களுக்கு மட்டும் அந்த விசேட உரிமையை வழங்கியது யார்?

முன்பு வரதராஜப்பெருமாள் தமிழ் தேசிய இராணுவத்தை அமைத்த போது அரசாங்கம் பலமாக கண்டனம் தெரிவித்தது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியது-

ஆனால் இப்போது புலிகள் 12 வயது பாடசாலை மாணவர்களுக்குக் கூட இராணுவப் பயிற்சி அளித்து வருகின்றனர்- தமமுடைய இராணுவப் பிரிவைப் பலப்படுத்தி வருகின்றனர்-

இதை எல்லாம் தெரிந்து கொண்டும் அரசாங்கம் மௌனமாக இருப்பது ஏன்? புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கம் அடிபணிந்து விட்டதா? அல்லது வடக்கு கிழக்கு மாகாணங்களைப் புலிகளுக்கே வழங்கி விட்டதா? அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும்-

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டே வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டனர்-

ஒன்றுபட்ட இலங்கை பல பிரிவுகளாக சிதறுண்டு போக இடமளிக்கக் கூடாது-

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்- இப்படி திருமதி பண்டாரநாயக்கா வற்புறுத்தினார்-

(உ-ய)

---

## பல்கலை கல்வி பற்றி சிறப்புரை

இன்று ஏழாம் திகதி மத்திய கொழும்பு ரோட்டரி கழகம் ஏற்பாடு செய்துள்ள வாராந்த கூட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் பல்கலைக்கழகக் கல்வி பற்றி சிறப்புரையாற்றுவார்-

பல்கலைக்கழகக் கல்வி - ஒரு திண்டாட்டம் என்பதாக இச் சொற்பொழிவின் தலைப்பு அமைந்திருக்கும்-

(ல-032)

---

## தோட்டங்கள கொத்தணியின் கீழ்

மடவளை, மார்ச் 5

பாத்ததும்பறை தேர்தல் தொகுதியிலுள்ள அரச தோட்டங்கள் கொத்தணி அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன,

பன்வில, கபரகலை, பமபரெல்லை மடுல்கலை போன்ற பகுதிகளில் உள்ள 12 அரச தோட்டங்கள் கல்பிஹில்ல அரச தோட்டத்தை மையமாகக் கொண்டு ஒரு கொத்தணி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எல்லாத் தோட்டங்களும் கொத்தணி அமைப்பின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது,

(ஐ-431)

---

## பாதை மறுசீரமைப்பு

அக்குறணை, மார்ச் 5

கண்டி மாவட்டத்தில் உள்ள கலகெதர வெலகம பாதை புனரமைப்புக்கென ஒரு லட்ச ரூபாவும், யடிநுவர, பொத்தப்பிடிய பாதை சீரமைப்புக்கு ஒரு லட்சத்து இருபது ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவ்விரு பாதைகளும் வாகனப் போக்குவரத்துக்கென புதிதாக சீரமைக்கப்பட உள்ளன,

(ஐ-411)

முடிவு நேரம் 2315

காஷ்மீர் மீது

# இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்கலாம்

## ஆஸாத் காஷ்மீர் தலைவர் கையூம் கான அச்சம்

இஸ்லாமாபாத், மார்ச் 6

**காஷ்மீர் மீது இந்திய அரசு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக் கூடுமென அச்சம் தெரிவிக்கப்பட்டுகிறது. பாகிஸ்தான் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆஸாத் காஷ்மீர் தலைவர் சர்தார் அப்துல் கையூம் கான் இவ்வாறு அச்சம் தெரிவித்திருக்கிறார்.**

இந்தியாவுக்குச் சொந்தமான காஷ்மீர் பகுதியில் எழுச்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. இல்லாத போனால் இந்தியா தாக்குதலை ஆரமபிக்கக் கூடுமென சர்தார் அப்துல் கையூமகான் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் அவர் உரையாற்றினார், ஜமமு காஷ்மீர் மாநிலத்தில் கிளர்ந்தெழுந்திருக்கும இளைஞர்களைக் கட்டுப்படுத்த இந்திய அரசு பல வழிகளிலும முயன்றது. ஆயினும முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை, இந்த நிலையில் இந்தியா அஸாத் காஷ்மீரில் இராணுவ நடவடிக்கையை மேறகொள்ள முன் வரலாம எனத் தாம் கருதுவதாகக் கூறினார்.

இந்தியா பாகிஸ்தான் மீது எந்த வகையிலும யுத்தமொன்றை நடத்தமாட்டாது என்ற உறுதியான நமபிக்கை தம்மிடம இருப்பதாகவும அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினை தீர்வுக்கு இஸ்லாமிய உச்சி மாநாடு ஒன்றை பாக் அரசு கூட்ட வேண்டும, அரபு நாடுகள் இந்த உச்சி மாநாட்டில் பங்கு கொள்ள மறுத்தால், அவற்றை அலட்சியம செய்து விடுஙகள், அவர்கள் தவறி விட்டார்கள் என உலகம தெரிந்து கொள்ளட்டும என அவர் கூறினார். (எ)

## நெருக்கடி தீர்வுக்கு எகிப்தின் உதவியை இந்தியா கோருகிறது

கைரோ மார்ச் 6

காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்க எகிப்து உதவ வேண்டுமென இந்தியா கோரிக்கை விடுத்திருக்கிறது.

திஙகட்கிழமை இந்தக் கோரிக்கையை இந்தியா விடுத்தது. அயல் நாடான பாகிஸ்தான் தீவிரவாதத்துக்கு ஆதரவு நல்கி வருவதாகவும இந்தியா தெரிவித்திருக்கிறது.

இந்திய எாசக்தி சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆரிப் மொகமட் கான் எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கைச் சந்தித்தார். அதன் பின் பத்திரிகையாளருடன் கொண்டிருக்கும நட்பைப் போன்று பாகிஸ்தானுடனும நட்புக் கொண்டிருப்பது எமக்குத் தெரியும.

இவ்வாறு அவர் கூறினார். (எ)

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி உண்ணா விரதம்

### 11 பெண்கள் கைதாகினர்

## பிலிப்பைன்ஸில் 54 பணயக் கைதிகளை விடுவிக்க ஹோட்டல் முற்றுகை

### நால்வர் மரணம் பலர் காயம்

மணிலா மார்ச் 6

54 பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக பிலிப்பைன்ஸ் துருப்புகள் ஞாயிறன்று ஹோட்டலொன்றை முற்றுகையிட்டன.

பிராந்திய ஆளுநர் ஒருவரின் ஆயுதமேந்திய ஆதரவாளர்கள் குட்டரன் நகர ஹோட்டல் ஒன்றில் மேற்படி 54 பேரையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர்.

ககாயன் ஆளுநர் ருடொல் போ அகுவினால்டோ ஆதரவாளர்களின் பிடியிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்க எடுக்கப்பட்ட முயற்சியின் போது நான்கு பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஒருவர் ஒரு இராணுவ ஜெனரலாவார். பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்குவினோவின் ஆட்சியைக் கவிழ்க்க சதிப் புரட்சியில் ஈடுபட்டவர்களில் ருடோல் போவும ஒருவரெனக் கூறப்படுகிறது.

இவரை துருப்பினர் தேடி வருகின்றனர். பணயக் கைதிகளை விடுவிக்க ஹோட்டலை துருப்புகள் முற்றுகையிட்ட வேளையில் ருடோல்போ ஹோட்டலில் இருக்கவில்லை எனவும அறிவிக்கப்படுகிறது.

அமைச்சர் லூயிஸ் சன் டோஸ் உட்பட மற்றொருவர் ஆபத்தின்றி காப்பாற்றப்பட்டனர். (எ)

## உலகச் செய்திகள்



### அகதிச் சிறார்கள் முகத்தில் மலர்ச்சி

ஹொஙகொங அகதி முகாமகளில் தஙகியிருந்த நான்கு சிறுவர்களையே படத்தில் காண்கிறீர்கள். 45 பேர் கொண்ட

நிலையம வந்திறஙகிய போது புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரின் கமெராவுக்குள் இச் சிறுவர்கள் சிக்கிக் கொண்டனர். தம எதிர்

## நீர் மூழ்கி கப்பல் ஒப்பந்தம் எதிராக வழக்கு

டாளர்களுக்கு பெரும செலாவ

புதுடில்லி மார்ச் 6

மேற்கு ஜெர்மன் நிறுவனம ஒன்றுடன் 1981 ஆம ஆண்டு செயது கொள்ளபபட்ட நீர் மூழ்கிக் கப்பல் கொளவனவு தொடர்பான ஒப்பந்தமொன்றில் ஊழல் இடமபெற்றிருப்பதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய இரகசிய பொலிஸ் ஸ்தாபனைப் பிரிவினர் இந்த வழக்கினை புதுடில்லி நீதிமன்றமொன்றில் தாக்கல் செய்திருக்கின்றனர்.

மேற்கு ஜெர்மனியில் உள்ள, ஹோவால்ட்ஸ்வர்க் டுவர்ட் ஷேவேர்ப்ட் என்ற நிறுவனத்திடமிருந்து 28 கோடி 18 லட்சம டாலர்கள் பெறுமதி கொண்ட நீர் மூழ்கிக் கப்பல்களை வாஙக ஒப்பந்தம செய்து கொள்ளப்பட்டது.

1981 இல் செய்து கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் ஊழல் இடமபெற்றிருப்பதாக இந்தியப் பிரதமர் விஸ்வநாத்

...கான் எகிப்த ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கைச் சந்தித்தார். அதன் பின் பத்திரிகையாளரை அவர் பேட்டி கண்டார், இவ்வேளையிலேயே அவர் காஷ்மீர் பிரச்சினை குறித்து கருத்து வெளியிட்டார், காஷ்மீர் நெருக்கடிகளுக்கு பாகிஸ்தானே காரணமாக இருக்கிறது, பாகிஸ்தான் பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதே இதற்கான காரணமாகும, எமது நட்பு நாடான எகிப்து காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்க உதவ வேண்டும, எகிப்து இந்தியாவு

## எம், பிக்களாக அரசியல் கைதிகள் தெரிவு

கீவ், மார்ச் 6

உக்ரேனியன் நாடாளுமன்ற உறுப்பினர்களாக முன்னாள் அரசியல் கைதிகள் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்-

உக்ரேனிய நாடாளுமன்றத் தேர்தல் கடந்த வார இறுதியில் இடமபெற்றது-

உத்தியோகபூர்வ ரீதியில் இன்னும முடிவுகள் வெளியாகவில்லை- ஆயினும முன்னாள் அரசியல் கைதிகள் இருவர் தெரிவு பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது- (எ)

## பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி 5 பேர் மரணம்

இஸ்லாமாபாத், மார்ச் 6

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியை அண்டிய பலுகிஸ்தானில் திங்களன்று ஏற்பட்ட பூமி அதிர்ச்சியின் போது 5 பேர் உயிரிழந்தனர்-

## 11 பெண்கள் கைதாகினர்

ஜொஹன்னர்ஸ்பேர்க் மார்ச் 6

தென் ஆபிரிக்க சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும அரசியல் கைதிகளை விடுவிக்குக் கோரி உண்ணாவிரதப் போராட்டம ஒன்று ஆரம பிக்கப்பட்டிருக்கிறது- இவர்களில் பலர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்-

11 பெண்கள் தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொண்டு நாடாளுமன்ற உருக்கு கேட்டுகளில் அந்த விலங்குகளினால் பிணைத்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்டனர்-

சிறையிலிருக்கும அரசியல் கைதிகளின் உறவினர்கள் நண்பர்கள் சகாக்கள் போன்றோரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் இறங்கினர்- ஒருமைப்பாட்டை வெளிக்காட்டவே அவர்களால் உண்ணாவிரதம மேற்கொள்ளப்பட்டது-

றோபன் தீவில் சிறைவாசம அனுபவிக்கும 352 கைதிகளை விடுதலை செய்யக் கோரியும பிரிட்டோரியா மத்திய சிறையில் உள்ள 10 பேரை விடுவிக்கக் கோரியும பெண்கள் உண்ணாவிரதத்தில் இறங்கியதாக பேச்சாளர் ஒருவர் கூறினார்-

தென்னாபிரிக்காவில் கறுப்பர் மீதான தடைகள் பலவற்றைத் தளர்த்திய ஜனாதிபதி பிரட்ரிக் டி கிளார்க் எவ்வித நிபந்தனையுமின்றி அரசியல் கைதிகளையும விடுதலை செய்ய வேண்டும என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்- (எ—ரி)

ஹொங்கொங் அகதி முகாமகளில் தங்கியிருந்த நான்கு சிறுவர்களையே படத்தில் காண்கிறீர்கள்- 45 பேர் கொண்ட படகு அகதிகள் குழுவொன்று பிரிட்டனில் வாழும தம உறவினருடன் இணைவதற்காக ஹொங்கொங் அகதி முகாமகளை விட்டு வெளியேறியது- அவர்கள் ஹீத்ரோ விமான நிலையம வந்திறங்கிய போது புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரின் கமெராவுக்குள் இச் சிறுவர்கள் சிக்கிக் கொண்டனர்- தம எதிர்காலம இனி மலரப் போகிறது என்ற நமபிக்கை அவர்களின் முகத்தில் பிரகாசிக்கின்றது- (எ*ச)

... இந்த ... ஊழல் இடமபெற்றிருப்பதாக இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப்சிங் குற்றம் சாட்டியிருந்தார்.

11 பக்கங்களைக் கொண்ட குற்றச் சாட்டு திங்களன்று நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது-

ஓய்வுபெற்ற பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஐந்துபேர், கடற்படை அதிகாரிகள் பிரிட்டனில் வாழும கைத்தொழில் அதிகாரி ஒருவர் ஆகியோர் இந்த மோசடியில் சமபந்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது-

இந்திய மத்திய இரகசிய விசாரணைப் பிரிவு இவர்களை விசாரணை செய்யும. (எ)

# போபால் அகதிகளுக்கு ஆறுதல் அளிக்க நிதி

## 21 கோடி டாலர் இந். அரசு வழங்கும்

புதுடில்லி மார்ச் 6

போபால் அகதிகளுக்கு ஆறுதல் நிதியாக 21 கோடி 80 லட்சம டாலர்களை வழங்குவதென இந்தியா முடிவு செய்திருக்கிறது-

போபால் நச்சுவாயு விபத்துச் சமபவம இடமபெற்று சுமார் ஐந்தாண்டுகள் கடந்து விட்டன- இப்போது சமபவத்தில் பாதிப்புற்ற குடுமபங்களுக்கு மேற்படி தொகையை ஆறுதல் நிதியாக வழங்க இந்திய அரசு முன்வந்திருக்கிறது-

பெற்றோலியம மற்றும இரசாயனத்துறை அமைச்சர் திரு எம எஸ் குருபாதசுவாமி இது பற்றிய தகவலை திங்களன்று வெளியிட்டார்-

தொடர்ந்து 3 வருடகாலத்துக்கு மாதம 200 ரூபா என்ற அடிப்படையில் இந்தப் பணம பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும வழங்கப்படும-

1984 ஆம ஆண்டு டிசமபர் 3ஆம திகதி நடந்த போபால் நச்சுவாயுச் சமபவத்தில் 5 லட்சம பேர் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர்- இவர்களுக்கே மாதாந்த அடிப்படையில் ஆறுதல் நிதியை இந்திய அரசு வழங்க முன்வந்திருக்கிறது- 2500க்கு அதிகமானோர் இச்சம பவத்தில் பலியாகினர்- சுமார் 20 ஆயிரம பேர் அங்கவீனர்களாகி உள்ளனர்-

ஆறுதல் நிதி வழங்கும் பணிகள் விரைவில் ஆரமபமாகுமென அமைச்சர் குருபாதசுவாமி அறிவித்திருக்கிறார்- (எ)

## எல்லைப்புற அச்சுறுத்தல்: சமாளிக்க பலம் உண்டு

### —இந்திய பிரதமர் சிங்

புதுடில்லி மார்ச் 6

எல்லைப் புறத்தில் ஏற்படும எந்த ஓர் அச்சுறுத்தலையும, சவாலையும சமாளிக்க, நாடு பலம பெற்றிருக்கிறது- இப்படி இந்தியப் பிரதமர் திரு விஸ்வநாத் பிரதாப் சிங தெரிவித்தார்-

மத்திய பாதுகாப்பு படையினரின் பொன் விழா நிகழ்ச்சிகள் புதுடில்லியில் நடைபெற்றன- இந் நிகழ்ச்சிகளில் பிரதமர் திரு வி பி சிங பிரதம அதிதியாக கலந்து கொண்டார்-

பாதுகாப்பு பிரிவினர் கடந்த காலங்களில் ஆற்றிய வீர செயல்களுக்காக பிரதமர் வி பி சிங, அவர்களுக்கு பதக்கங்களை அணிவித்து கௌரவித்தார்-

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம பேசும போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்-

காஷ்மீர் பிரச்சினைக்கு இந்திரா காங்கிரஸ் அரசே காரணம என்றும அவர் குற்றஞ்சாட்டினார்-

இச் செய்தியை அகில இந்திய வானொலி ஒலிபரப்பியது- (ண-வ)

## சமாதான பேச்சு கைரோவில் இன்று

ஜெருசலம, மார்ச் 6

கைப்பற்றப்பட்ட மேற்கு கரையோர காசா தொடுவாய்ப் பகுதி சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்று புதன்கிழமை கைரோவில் நடைபெற உள்ளன-

இஸ்ரவேல் தலைவர் ஷமீரின் லிக்குவிட் கட்சியினால் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது மேலும பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன-

வர வர இறுகிக் கொண்டு போகும இப் பிரச்சினை அமெரிக்காவின் சமாதான பேச்சிற்குரிய அழைப்பிற்கு மேலும சோதனைகளை தோற்றுவித்திருக்கிறது-

பலஸ்தீன இயக்கப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றக் கூடாது என்பது ஷமீரின் பிடிவாதம- இப்போது இஸ்ரவேலுடன் இணைக்கப்பட்ட கிழக்கு ஜெருசேலம அரபுக்களும இப் பேச்சுக்களில் பங்கு பற்றக் கூடாதெனகிறார் ஷமீர்-

இஸ்ரவேலுடன் ஜெருசேலம இணைக்கப்பட்ட பின் இஸ்ரவேல் தன்னாதிக்கம உள்ள ஒரே நாடு என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை என்று ஷமீர் கூறுகிறார்-

எனவே கிழக்கு ஜெருசேலம மக்கள் சமாதானப் பேச்சில் பங்கு பற்றினால், தேர்தலில் பங்குபற்றினால் ஜெருசேலம பிளவுபடுவதற்கு அவை முன்னோடியாக அமையும-

இப்படி லிக்குவிட் கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்-

பலஸ்தின இயக்கத்தின்படி 1,40,000 அரபுக்கள் கிழக்கு ஜெருசலத்தைச் சேர்ந்தவர்கள்- அவர்கள் பேச்சுக்களிலும தேர்தல்களிலும பங்குபற்ற வேண்டும- ஏனென்றால் கிழக்கு ஜெருசலமே தமது பலஸ்தீனத்தின் தலைநகரம-

அமெரிக்க ராஜாங்க அமைச்சுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் தமது அழைப்பில் இஸ்ரவேலால் நாடு கடத்தப்பட்ட பலஸ்தீனர்களையும மேற்குக் கரை அரே... கைரோ சமாதானப் பேச்சுக்களுக்கு அழைக்கக் கோரியிருக்கிறார்- (எ)

பென்சில் இறேசர் என்ற போர்வையில்

# இறக்குமதியான கொள்கலன்:

# சூழல் மாசடையும் அபாயம்

கொழும்பு, மார்ச் 6

பென்சில் இறேசர் என்ற போர்வையில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் விஷத்தன்மை கொண்ட கழிவுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இக்கழிவுப் பொருட்கள் சூழல் மாசு ஆபத்தைத் தோற்றுவிக்கலாம் என மத்திய சூழல் பாதுகாப்பு அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இக்கழிவுப் பொருட்களை அடக்கிய பதினொரு கொள்கலன்கள் கொழும்பு துறைமுகக் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. விஷத்தன்மை கொண்ட ஆபத்தான கழிவுப் பொருட்களை இவை உள்ளடக்கியுள்ளன என்பது இப்போது தெரியவந்துள்ள போதிலும் அவை எவ்வாறான பொருட்கள் என்று இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இதைத் தெரிந்து கொள்ளும் வகையில் இக் கழிவுகளின் சாம்பிள்கள் அரச ரசாயன பகுப்பாய்வாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ் விஷக்கழிவுகளின் தன்மை அடையாளம் காணப்பட்ட பின்னரே இவற்றை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

இக்கொள்கலன்கள் எந்நாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. கொள்கலன்கள் ஏற்றி வந்த கப்பலையும் அடையாளம் காண முடியாதுள்ளது.

ஆனால் தென் கிழக்கு ஆசியாவில் இருந்தே இக் கழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. மர்மமான முறையிலேயே இக்கொள்கலன்கள் கொழும்பில் இறக்குமதியாகியுள்ளன என்று துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆபத்தான கழிவுப் பொருட்கள் கொழும்புத் துறைமுகத்தில் இருப்பதாக மத்திய சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கு துறைமுக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இக்கழிவுகளை எவ்வாறு அழிக்கலாம் என்ற ஆலோசனைகளை வழங்குவதற்கு முன்பாக இவை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ள சூழல் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் டாக்டர் றோகண விக்ரமசிங்க ரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கையையே தாமும் எதிர்பார்த்திருப்பதாகக் கூறியுள்ளார்.

இதேசமயம் கொழும்பு துறைமுக அதிகாரிகளின் அலட்சியம் காரணமாகவே இக்கழிவுப் பொருட்கள் கொழும்பை வந்தடைய நேர்ந்தது என்று குறை கூறியுள்ள மேற்படி அதிகார சபை உத்தியோகத்தர்கள், இவ்வாறான அபாயகரமான கழிவுப் பொருட்கள் எதிர்காலத்தில் வராது இறக்குமதியாகாமல் துறைமுக அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

(ஐ-032)

## சிறுவனை கண்டுபிடிப்பதில் உதவ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 6

காணாமற் போன தமது செவிப்புலனற்ற பத்து வயது மகனைத் தேடிக் கொண்டிருக்கும் பெற்றோர் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

சுமித் புஸ்ப தரங்கா என்ற இச் சிறுவன் சிலாபம் மஹாவெவை சிவராஜா சிறுவர் மடத்தில் கல்வி கற்று வருபவர். சென்ற பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் இவர் காணாமற் போய் விட்டார்.

மூன்றரையடி உயரம் கொண்ட இவர் செவிப் புலனற்றவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தால் உடனடியாக அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி பெற்றோர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ல-032)

## மக்களும் பதவியும்

### அரச அதிபராக நியமனம்

கோப்பாய், மார்ச் 5

யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக திரு அன்ரன் அல்பிரட் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நீண்டகாலம் பதவி வகித்த திரு அன்ரன் அல்பிரட் கிளிநொச்சி அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்று அங்கு கடமையாற்றி வந்தார்.

(ஐ-142)

### வர்த்தக சிப்பந்தி சங்க நிர்வாகிகள்

கொழும்பு, மார்ச் 6

நாவல் நகர் வர்த்தக சிப்பந்திகள் சேவா சங்கத்தின் நடப்பு வருட (1990) நிர்வாகிகளாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலைவர்— திரு டி வி துரைராஜு, உப தலைவர்கள்— டி நாகராஜ், பி முனுசாமி.

பொதுச் செயலாளர்— திரு எஸ் இராஜசேகரன், துணைப் பொதுச் செயலாளர் திரு ஆர் சிவராஜா.

பொருளாளர்— திரு எஸ் பி மோஹனராஜ், துணைப் பொருளாளர் திரு பி முத்துலிங்கம்.

கணக்குப் பரிசோதகர்கள் திரு என் எஸ் முரளிநாதன், திரு எம் புஸ்பராஜா.

14 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ய)

## வசதியற்றவர்களுக்கு வங்கிக் கடன் மூலம் மின்சாரம்

களுத்துறை, மார்ச் 5

"வசதியற்றவர்களுக்கு வங்கிக் கடன் மூலம் மின்சாரம் வழங்கப்படும். பணம் உள்ளவர்களுக்கு, பணத்தைச் செலுத்தி மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்"

மின்சக்தி ராஜாங்க அமைச்சர் திரு மேர்வின் ஜே குரே இப்படிக் கூறினார்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள புளத் சிங்கள, ஹொறணை ஆகிய தொகுதிகளில் பல்வேறு மின் விநியோகத் திட்டங்கள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அங்கு அமைச்சர் குரே தொடர்ந்து குறிப்பிட்டதாவது—

"மனிதனுக்கு, பசிக்கு உணவு போல், மின்சாரமும் மிகவும் அவசியம். மின்சாரம் சரியாக இயங்காவிட்டால், மனிதனால் சரியாக வாழ முடியாது.

இன்று நாட்டின் சில பகுதிகளில், மின்சார நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன. இவைகள் சீர்குலைவதற்குக் காரணம் எமது நாட்டின் சதி நாசகாரர்களே.

மின்சார நடவடிக்கைகள் சேதமாக்கப்பட்டுள்ள போதும் அவைகளை நாம் ஒருபோதும் இத்துடன் நிறுத்தி விடமாட்டோம். நிச்சயமாக அவைகள் அனைத்தையும் படிப்படியாக துரிதமாக சீரமைப்போம்.

எமது ஜனாதிபதி பிரேமதாசவின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டாயிரமாவது வருடமாகும் போது நாடு பூராவும் மின்சாரம் விநியோகிக்கப்படும். தற்போது களுத்துறை மாவட்ட மின் விநியோகத்திற்கென, சுமார் இருநூறு லட்ச ரூபாவையும் நான் செலவு செய்துள்ளேன்"

— இவ்வாறு அமைச்சர் குரே கூறினார்.

(இ-040)

### முதலமைச்சர் வெளிநாடு பயணம்

நாத்தாண்டி, மார்ச் 5

வடமேல் மாகாண முதலமைச்சர் திரு காமினி ஜயவிக்ரம பெரேரா வெளிநாடு சென்றுள்ளார்.

அதனால் வடமேல் மாகாண சபை குடிசைக் கைத்தொழில், மின்சக்தி, எரிபொருள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி லொரீன் பெரேரா முதலமைச்சராகக் கடமையாற்றி வருகிறார்.

(ஐ-225)

## கண்டியில் கல்வி கருத்தரங்கு

கண்டி, மார்ச் 5

கண்டி மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்கள் சங்கத்தின் முயற்சியினால் க பொ த சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு இலவச கல்விக் கருத்தரங்கு நடைபெற உள்ளது.

கணிதம், சமூகக்கல்வி, விஞ்ஞானம், ஆங்கிலம், தாய்மொழி இஸ்லாம் ஆகிய பாடங்களுக்காக இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

இம் மாதம் நடைபெற உள்ள ஜீ சி ஈ சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இந்தக் கருத்தரங்கு அக்குறணை மத்திய கல்லூரி, பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி, ஹந்தெஸ்ஸ அலமனார் மத்திய கல்லூரி,

கம்பளை ஸாஹிராக் கல்லூரி மடவளை மதீனா மத்திய கல்லூரி, கலகெதர ஜப்பார் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இதனை கண்டி மாவட்ட முஸ்லிம் பாடசாலைகள் அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் ஜனாப் எம் வை எல் ஏ தையூம் "தினபதி"க்குத் தெரிவித்தார்.

(இ-017)

## முலிகை நடல்

அக்குறணை, மார்ச் 5

வலப்பனை பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியர் சங்க அமைப்பு இப்பகுதி மாவட்ட வைத்தியசாலைக்கு அருகில் உள்ள நிலப்பகுதிகளில் மருந்து மூலிகைகளை நடுவதற்கான திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்காக அரசிடமிருந்து நான்கு ஏக்கர் நிலப் பகுதி பெற்றுக் கொடுக்கப்பட்

## ஆயுத போராட்டம்: இ. தொ. காவுக்கு

# சுவரொட்டி ஊரடங்கு உத்தரவை ஹிரியால மக்கள் பின்பற்றினர்

## நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பு சாட்சி

கொழும்பு, மார்ச் 6

ஹிரியாலை தொகுதியில் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி நள்ளிரவு முதல் 19 ஆம் திகதி நள்ளிரவு வரை, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது— தேர்தல் தினத்துக்கு

அவர்களை சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்று அழைக்க முடியாதல்லவா?

சாட்சி— அமைப்பாளர் அவர்கள் பேரில் விசுவாசம் கொண்டிருந்தால் உறுப்பினர்களாக அவர்களைக் கருத முடியும்!

சட்டத்தரணி— அமைப்பாள

சொன்னது தவறு— 150 கிளைகள் என்பதே சரி— நான் பொறுப்பேற்றதும் 203 கிளைகளை உருவாக்கினேன்— மொத்தம் 380 கிளைகள் என்பதே சரி! மூவாயிரத்து 800 என்பது சரியல்ல!

சட்டத்தரணி— அதாவது நேற்றைய கணக்கின் பதில் ஒன்று!

சாட்சி— விக்ரமசிங்க பண்டார, ஏ சி லால்!

சட்டத்தரணி— இவர்கள் சாட்சியமளித்துள்ளனரா?

சாட்சி— ஆம்!

சட்டத்தரணி— வேறு யார்?

சாட்சி— ரஞ்சித் பிரேமரத்ன!

சட்டத்தரணி— நீர்

# இ. தொ. காவுக்கு

## நம்பிக்கையில்லை

—ராமதாஸ்

கொழும்பு, மார்ச் 6

ஆயுதப் போராட்டத்தில் இ தொ கா ஒரு போதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை- அஹிம்சை வழியே எமது போராட்ட வழியாகும்-

நமது சமயக் கடவுள்கள் வேல், சூலாயுதம் ஆகியவற்றைத் தரித்திருப்பது ஆயுதமேந்தி நாம போராட வேண்டுமென்பதற்காகவல்ல- நமது அச்சத்தைப் போக்கி தைரியத்தை அளிப்பதற்காகவே-

இ தொ கா தமபஹா மாவட்ட அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான திரு ஆர் ஆர் ராமதாஸ் இவ்வாறு கூறினார்-

நீர்கொழும்பு தொச்சிக்கடை நகர இ தொ கா ஊழியர் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்-

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

நமது உரிமையை நிலை நாட்டிக் கொள்வதற்கு நாம அஞ்சத் தேவையில்லை- அச்சமும் அவநம்பிக்கையும் எந்த சமுதாயத்தையும் பலவீனப்படுத்தி விடும்- துணிவை துணையாகக் கொண்டு நாம செயல்பட்டால் எந்தக் காரியத்திலும் வெற்றி காண முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்-

இக் கிளையின் தலைவராக திரு கே சண்முகம், உப தலைவராக திரு வியனகே விஜிதா சில்வா, செயலாளர் திரு ஆர் தேவகுமார், உப செயலாளர் திரு ராமசாமி புலேந்திரன், பொருளாளர் திருமதி மேரி எனஸ்டின் பொன்சேகா, உப பொருளாளர் திருமதி சன்முகம மகேஸ்வரி ஆகியோரும 14 பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்-

[ந—டி]

## இராணுவ வீரர் தாக்கப்பட்டார்

கொழும்பு, மார்ச் 6

இரவு நேரத்தில் வீட்டுக்குள் புகுந்து கொள்ளை அடிக்க முயன்றதாகக் கூறப்படும் ஓர் இராணுவ வீரர் தாக்கப்பட்டார்-

கிரித்தலே விவசாயக் குடியேற்றத்தில் உள்ள ஒரு வீட்டில் இச் சம்பவம் நடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர்-

கொழும்பு இராணுவ முகாமில் சேவை புரிவதாகக் கூறிய இந்த வீரர் மற்றும் இருவருடன் பிரஸ்தாப வீட்டுக்குள் பிரவேசித்திருக்கிறார்-

வீட்டில் இருந்த யுவதியின் தஙக ஆபரணஙகளை பறிக்க முன்ற போது யுவதி ஓலமிடவே அயல் வீட்டுக்காரர்கள் வந்து சந்தேக நபரைப் பலமாகத் தாக்கி உள்ளனர்-

இராணுவ வீரருடன் வந்த மற்றும் இருவரும் தலைமறைவாகினர்-

படுத்த காயமுற்ற இராணுவ வீரர் பொலன்னறுவை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்-

ஹிங்குரன்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு [illegible] ஒரிவர்த்தனா தலைமையிலான குழு இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறது-

19 ஆம திகதி நள்ளிரவு வரை, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது- தேர்தல் தினத்துக்கு மூன்று தினஙகளுக்கு முனனர், இந்த ஊரடஙகு தொடர்பான அறிவித்தல் சுவரொட்டிகள் மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது- சுவரொட்டியில் விடுக்கப்பட்டிருந்த இந்த ஊரடஙகு உத்தரவை ஹிரியாலை மக்கள் அப்படியே பின்பற்றினர்-

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் தரப்பில் தோன்றி சாட்சியமளித் எம ஆர் ரஞ்சித் இவ்வாறு தெரிவித்தார்-

திரு பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் ஈட்டிய வெற்றி செல்லுபடியாகாது என்று தெரிவித்து திருமதி பண்டாரநாயக்கா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர், பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள், எச் டி தமபையா, ஜி பி எஸ் டி சில்வா, எம ஜமீல், பி இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது-

முதலில் டபிள்யூ எம பி டி ஏக்கநாயக்க சாட்சியமளித்தார். சாட்சியை பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்-

சட்டத்தரணி- புதிய கட்சிக் காரியாலயம அமைக்கப்பட வேண்டுமானால் இருபது உறுப்பினர்களாவது தேவை அல்லவா?

சாட்சி- ஆம!

சட்டத்தரணி- அனுமதி பெறாமல் கட்சிக் காரியாலயஙகளை நடத்த முடியுமா?

சாட்சி- முடியாது!

சட்டத்தரணி- அஙகத்தவர் கார்ட் வழஙகப்படாத வரை, ...ருந்தால் உறுப்பினர்களாக அவர்களைக் கருத முடியும!

சட்டத்தரணி- அமைப்பாளருக்கு அதிகாரம உண்டு?

சாட்சி- ஆம!

சட்டத்தரணி- இவ்விடத்தில் உமது சாட்சியம தவறானது!

சாட்சி- இல்லை!

800 என்பது சரியல்ல!

சட்டத்தரணி- அதாவது நேற்றைய கணக்கின் பத்தில் ஒன்று!

சாட்சி- ஆம!

சட்டத்தரணி- நீர் இரண்டாயிரத்து 300 கிளைகளை உருவாக்கியதாக கூறினீர்! அத்தொகையின் பத்தில் ஒன்று என்று

## ஜனாதிபதி தேர்தல் வழக்கு

சட்டத்தரணி- 1988 டிசமபர் மாதமளவில் யாப்பஹுவ தொகுதியில் சுமார் மூவாயிரத்து 800 சுதந்திரக் கட்சி கிளைக் காரியாலயஙகள் இயஙகி வந்தன என்று நீர் ஏற்கனவே சொல்லியிருந்ததாலேயே நீர் இப்போது பொய் சொல்கிறீர்!

சாட்சி- ஆம!

சட்டத்தரணி- 3800 ஐ இருபதால் பெருக்கி பதிலைச் சொல்லும!

சாட்சி- இருபது என்ற கணக்கில் 76 ஆயிரமாகிறது!

சட்டத்தரணி- 1988 ஆம ஆண்டு டிசமபரில் யாப்பாஹுவையின் மொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை என்ன?

சாட்சி- 66 ஆயிரத்து 320!

சட்டத்தரணி- யாப்பாஹுவையின் மொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையை விட உமது கிளைகளில் அதிக உறுப்பினர்கள் இருந்துள்ளனர்!

சாட்சி- இல்லை!

சட்டத்தரணி- ஒரு கிளையில் 20 உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் 3800 கிளைகள் இருந்தன என்ற உமது வாதம சரிப்பட்டு வர வேண்டுமானால் பதிவு செய்யப்படாத கிளைகளும இருந்தன என்ற நிலைப்பாட்டை நீர் ஏற்றுக் கொள்ள வேண்டும!

சாட்சி- நான் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது 1500 கிளைகள் இருந்தன என்று இன்று சொல்கிறீர்?

சாட்சி- ஆம!

சட்டத்தரணி- யாப்பாஹுவையில் சுதந்திரக் கட்சிக்கு நல்ல ஆதரவு நிலவியது என்று நீர் கூறினீர்-

சாட்சி- இதனால்தான் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் கட்சியை விட்டு விலகினார்!

நீதியரசர் தமபையா- ஆறாயிரம உறுப்பினர்கள் இருந்ததாக நீர் கூறியிருந்திர்?

சாட்சி அந்த எண்ணிக்கையையும மாற்ற வேண்டும!

பிரதம நீதியரசர்- ஆறாயிரம 600 ஆக வேண்டுமா?

சாட்சி- கிளைக்கு இருபது என்ற ரீதியாக 380 கிளைகளுக்கு நாலாயிரத்து 950 பேர்!

சட்டத்தரணி- சடுதியாக 380 என்ற எண்ணிக்கையை நீர் எஙகிருந்து பெற்றீர்?

சாட்சி- சரியான எண்ணிக்கையை தெரியப்படுத்த ஆவணஙகள் என்னிடம இல்லை என்று நான் கூறியிருந்தேன் நினைவில் இருப்பதையே நான் இஙகு சொல்கிறேன்-

சட்டத்தரணி- 3800 என்ற எண்ணிக்கையை 380 என்று எப்படி நீர் மாற்றினீர்?

சாட்சி- என் கட்சிக் கிளையைச் சேர்ந்தவர்கள் இதை என்னிடம கூறி திருத்தினார்கள்!

சட்டத்தரணி- யார், யாரை நீர் சந்தித்தீர்?

சட்டத்தரணி- வேறு யார்?

சாட்சி- ரஞ்சித் பிரேமரத்ன!

சட்டத்தரணி- நீர் சாட்சியமளித்த போது இமமூவருமே நீதிமன்றத்தில் சமூகமளித்திருக்கவில்லை- ஆகவே குறுக்கு விசாரணை பற்றி அவர்கள் தெரிந்திருக்க வழியில்லை-

சாட்சி- அவர்களுக்குத் தெரியாதுதான்- நான்தான் அவர்களிடம சொன்னேன்!

சட்டத்தரணி- நீர் எஙகே இவர்களைச் சந்தித்தீர்?

சாட்சி- கலுப்போவிலையில். இரவு அஙகு தான் நான் தஙகினேன்- இவர்கள் என்னைக் காண வந்தனர். குறுக்கு விசாரணை பற்றி அவர்களிடம நான் எடுத்துச் சொன்ன போது இந்த எண்ணிக்கை பற்றி அவர்கள் குறிப்பிட்டனர்-

சட்டத்தரணி- இரவா அல்லது காலையா இவ்விடயம பற்றி உரையாடினீர்?

சாட்சி- இரவும காலையும

சட்டத்தரணி- நீர் அளித்த சாட்சியம தவறானது!

பிரதம நீதியரசர்- தவறு நடந்து விட்டது என்று அவர் சொல்கிறார்!

சாட்சி- சாட்சியத்தில் மாற்றம செய்யப்பட வேண்டும!

சட்டத்தரணி- ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது ஒரு ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர் ஒருவர் வடமத்திய மாகாணத்தில் கொலை செய்யப்பட்டார்?

சாட்சி- ஜனாதிபதித் தேர்தலின் போது யாப்பாஹுவையில் பலர் கொல்லப்பட்டனர்- சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் கொலை பற்றி மட்டுமே நான் கவனத்தில் எடுத்துக் கொண்டேன்-

சட்டத்தரணி- ஆனால் மேற்படி நபர் கொலை செய்யப்பட்டது பற்றி நீர் கேள்விப்படவில்லையா?

இத்திட்டத்திற்காக அரசிடமிருந்து நான்கு ஏக்கர் நிலப் பகுதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

உடமாதுருவ - ஆயுள்வேத வைத்தியசாலைக்கு தேவைப்படும மூலிகைகளை இஙகிருந்து பெற்றுக் கொள்ளவும வாய்ப்பு ஏற்படும.

(இ-411)

சாட்சி- கேள்விப்பட்டேன். இருவர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது- திலக்கரத்ன என்பவர் மீது துப்பாக்கிப் பிரயோகம நடத்தப்பட்டதாயினும அவர் தப்பிக் கொண்டார்- சோமரத்ன என்பவர் கொல்லப்பட்டார்!

சட்டத்தரணி- 1988 நவமபர் மாதம யாப்பாஹுவ ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சாட்சி- கொல்லப்பட்டவர் எமபியின் பிரத்தியேகச் செயலாளர் அல்லர்- அவர் ஒரு முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர். கட்சியை விட்டு விலகி நடுநிலை வகித்து வந்தவர்!

பிரதம நீதியரசர்- அச்சமயத்திலா கொல்லப்பட்டார்?

சாட்சி- ஆம! அவர் கொலை செய்யப்பட்ட போது அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கவில்லை! ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த போது எம பியின் பிரத்தியேகச் செயலாளராக அவர் விளஙகினார்!

சட்டத்தரணி- அவர் ஏன் கொலை செய்யப்பட்டார்?

சாட்சி- எனக்குத் தெரியாது!

சட்டத்தரணி- பயமுறுத்தல்களை அவர் லட்சியம செய்யவில்லை- இதனால்தான் அவர் கொல்லப்பட்டார்?

சாட்சி- இருக்கலாம!

[விசாரணை தொடரும]

[ல—032]

சர்வதேச போட்டிகளின் பொருட்டு

# விளை. வீரர்களுக்கு ஊக்கமளிக்க நிதியம்

## டன்கன் வைட் பெயரில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 6

இலங்கைக்கு வெள்ளி ஒலிம்பிக் பதக்கமொன்றைப் பெற்றுத் தந்த டன்கன் வைட் பெயரில் விளையாட்டுத்துறை நிதியம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

கொழும்பு எயிட்டி கிளப் கழகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்நிதியம எதிர்கால ஒலிம்பிக் மற்றும சர்வதேச மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் வீரர்களுக்கு ஊக்கமளிப்பதை தன் பிரதான லட்சியமாகக் கொண்டிருக்கும.

இந்நிதியம தோற்றம் பெறுவதற்கான மூலகர்த்தாவான சி விஜித பெர்னாண்டோ மேற்படி ஆரமப வைபவத்தில் கலந்து கொள்ளும பொருட்டு வாஷிங்டனில் இருந்து விசேஷமாக வந்திருந்தார்.

டன்கன் வைட் நிதியம எந்த விளையாட்டுச் சமமேளனத்தையும சார்ந்ததாக இருக்காது— எந்த ஒரு விளையாட்டையும ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும செய்யாது— சர்வதேச மட்டத்தில் முன்னணியில் திகழக் கூடிய வீரர்கள் எந்த ஆட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும அவர்களை அடையாளம கண்டு அவ் வீரர்களின் திறமைகளை வளர்ப்பதும சர்வதேச ஆட்டங்களில் வெற்றியீட்ட அவர்களுக்கு உதவுவதமே இந்நிதியத்தின் பிரதான பணியாக இருக்கும.

1992 ஆம ஆண்டு அல்லது 1996 ஆம ஆண்டு ஒலிமபிக் போட்டிகளுக்கென சிறந்த உள்ளூர் வீரர்களை தயார் செய்வது இந்நிறுவனத்தின் குறிக்கோளாகு. இருப்பதோடு சர்வதேச ஆட்டங்களில் கலந்து கொள்ளும வீரர்களுக்கும ஊக்கமளிக்கும்.

இதே சமயம் வீரர்கள் தெரிவில் இன்னும குறைபாடுகள் நிலவி வருகின்றன, எ[illegible]ப் பட்டுவருவதால் இக்குறைகளை நீக்க டன்கன் வைட் நிதியம முன் வந்துள்ளது— இதன் பொருட்டு விளையாட்டுத் துறையில் அனுபவமும அதே சமயம் இத்துறையை வளர்க்கவும் விருமபும விளையாட்டு வீரர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது— பல்வேறு தேசிய சமமேளனங்கள் வெளிநாட்டு போட்டிகளுக்கென தமது அணிகளைத் தெரிவு செய்யும் போது இக் குழு மேற்படி தெரிவாளர்களுக்கு ஆலோசனை வழங்கும்,

இதே சமயம வருடா வருடம தலை சிறந்த விளையாட்டு வீரரைத் தெரிவு செய்து டன்கன் வைட் பரிசு அளிக்கவும் இந்நிதியம் முடிவு செய்துள்ளது, இப் பரிசைப் பெறும் வீரருக்கு ஒலிமபிக் அல்லது சர்வதேச மட்ட போட்டிகளுக்கென தன்னைத் தயார் [illegible]படுத்திக் கொள்ள நிதியுதவி வழங்கப் படும.

(எ—032)

## 2—மைல் நீள நீச்சலில் மீண்டும் தம்மிகா வெற்றி

கொழும்பு மார்ச் 6

கல்கிசை இரண்டு மைல் நீள கடல் நீச்சல் போட்டியில் நான்காவது தடவையாக அமபலாங்கொடை வீராங்கனை ஆர் எம தம்மிகா வெற்றியீட்டி தன் நீச்சல் திறமையை மீண்டுமொரு தடவை நிரூபித்தார்.

இதே சமயம் ஆண்கள் பிரிவில் பிரசன்னா மெண்டிஸ் வெற்றியை எட்டிப் பிடித்து மூன்றாவது தடவையாக தன் நீச்சல் திறமையை நிலை நாட்டினார்.

ஆண்களுக்கான போட்டியில் 628 நீச்சல் வீரர்கள் கலந்து கொண்டனர். இவர்களை பின்னுக்குத் தள்ளி விட்டு 42 நிமிடம் 19 வினாடி நேரத்தில் பிரசன்னா மெண்டிஸ் வெற்றிக் கோட்டைத் தாண்டினார்.

இதே சமயம 26 வீராங்கனைகளுடன் நீச்சலை ஆரம்பித்த தம்மிகா, 46 நிமிடம 55 வினாடிகளில் இரண்டு மைல் நீச்சலை முடித்துக் கொண்டார்.

ஆண்கள் பிரிவின் இரண்டாம இடத்தை பிரதீப் சந்திரிகாவும மூன்றாம இடத்தை என் எச் ஜனகவும பெற்றுக் கொண்டனர், இவ்விருவருமே அமபலாங்கொடை தர்மசோகா வித்தியாலய மாணவர்களாவர்.

பெண்கள் பிரிவில் வெற்றியீட்டிய தம்மிகாவும இதே வித்தியாலயத்தைச் சேர்ந்தவர். இரண்டாம இடத்தை பிரிஜட் கல்லூரியைச் சேர்ந்த சமந்தி ரூபசிங்கவும மூன்றாம இடத்தை விசாகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சண்டிமா குணவர்த்தனவும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் கலந்து கொண்டு மூன்று தடவைகள் தொடர்ந்து வெற்றியீட்டிய பிரசன்னா மெண்டிஸ் இனிமேல் தான் நீச்சல் போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற தமது முடிவை அறிவித்தார்,

நீச்சல் பயிற்சிகளை நடத்தும அளவுக்கு வசதியும நேரமும இல்லாத காரணத்தினாலேயே நீச்சல் போட்டிகளில் இருந்து ஒதுங்க முடிவு செய்திருப்பதாக அவர் கூறினார்.

இதே சமயம இப்போட்டி நடைபெற ஆரமபித்ததில் இருந்து ஓரளவு ஏமாற்று வேலைகளும அவ்வப்போது நடைபெற்று வருவதாக தமது கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று தேசிய அமைச்சூர் நீர் விளையாட்டு ஒன்றியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு மைல் நீள கடல் நீச்சல் போட்டியின் போது போதியமீட்புப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதையும பிரதி பொலீஸ்மா அதிபர் சிலர் சுட்டிக் காட்டினர்.

ஜே மித்ர ஆரியசிங்க மற்றும அவரது பாரியார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

[எ]

# விளையாட்டு பகுதி

## பதுளை கிரிக்கெட் கோஷ்டி வெற்றி

பதுளை மார்ச் 5

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியொன்றில் பதுளை கிரிக்கெட் கோஷ்டி மாத்தளை கிரிக்கெட் கோஷ்டியை 38 ஓட்டங்களால் தோற்கடித்தது

அகில இலங்கை கிரிக்கெட் சங்கத்தினரால் இப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது—

பதுளை கோஷ்டி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது—

மாத்தளை கோஷ்டி சகல விக்கெட்டுகளையும இழந்து 37—2 ஓவர்களில் 171 ஓட்டங்களை மாத்திரம பெற்றது—

பதுளை கோஷ்டி சார்பில் விஜித விஜேகோன் 52 ஓட்டங்களைப் பெற்றதுடன் 30 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்—

மாத்தளை கோஷ்டி சார்பில் ஐ சமரசிங்க, எஸ் தென்னக்கோன், எஸ் சேநாநாயக்க ஆகியோர் திறமையாக விளையாடினர்—

பதுளை கோஷ்டி தலைவர் சரத் பெரேரா 32 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

(எ—037)

## அரசியல்வாதிகள் விளை. வீரர்களை பார்த்து பாடம் படிக்க வேண்டும்

புத்தளம மார்ச் 5

"அரசியல்வாதிகள் விளையாட்டு வீரர்களைப் பார்த்து பாடம படிக்க வேண்டும— விளையாட்டு வீரர்களிடையே உள்ள ஒற்றுமை அரசியல்வாதிகளிடமும இருத்தல் அவசியமாகும"

வட மேல் மாகாண சபையின் புத்தளம பிரதிநிதி டாக்டர் ஐ எம இல்யாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்—

புத்தளம் சாஹிரா தேசியக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன—

கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில், பழைய மாணவர் என்ற ரீதியிலும பெற்றோரென்ற முறையிலும டாக்டர் இல்யாஸ் தொடர்ந்து கூறியதாவது—

"அஞ்சலோட்டத்தில் கலந்து கொள்ளும நான்கு வீரர்களும வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றனர்—

அக் குழு ஓட்டத்தில் வெற்றி பெற்றால் மகிழ்ச்சி அடைகின்றனர்—

தோல்வியுற்றால் மன நிறைவோடு தோல்வியையும் அக் குழு ஏற்றுக் கொள்கின்றது—

இதே நிலை அரசியலிலும வர வேண்டும—

நாது உரிமைகளை அனுபவித்தே நாம வாழ வேண்டும— அதைக் கோரும போது அல்லது செயல்படுத்த முனையும போது எவ்விதமான வேறுபாடும அங்கு இருக்க முடியாது!" எனக் கூறினார்—

(இ—241)

## இல்ல விளை. போட்டி

கொழும்பு கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று (7—3—90) காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன—

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும மேற்படி விளையாட்டுப் போட்டியில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும போக்குவரத்து ராஜாங்க அமைச்சருமான திரு எம எஸ் செல்லச்சாமி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார்—

போட்டியில் வெற்றியீட்டும மாணவர்களுக்கான பரிசுகளை மேல் மாகாண சபை உறுப்பினர் திருமதி வேலம்மாள் செல்லசாமி வழங்குவார்—

மேல் மாகாண சபை உறுப்பினர் திரு ஆர் ஆர் இராமதாஸ் மேற்படி வைபவத்தில் கௌரவ அதிதியாகக் கலந்து கொள்கின்றார்—

வித்தியாலய அதிபர் திரு ஐ சற்குணம் போட்டி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவார்—

(எ)


# விமான சேவைகள்

| மார்ச் 7 (புதன்கிழமை) | மார்ச் 8 (வியாழக்கிழமை) |
|---|---|
| வந்து சேரும நேரம | வந்து சேரும நேரம |


## வானொலி

6—30 மகாவலி நிகழ்ச்சி
7—00 களத்துமேடு — விவசாய சஞ்சிகை
7—15 கதம்பம — குறு நாடகங்கள்
8—00 லயவிந்யாசம மிருதங்கம எஸ் மகேந்திரன்
8—15 மெல்லிசைப் பாடல்கள்
8—30 சுவாரா மலாயூ மலாய்
குறிப்பும ஸலவாத்தும
9—00 செய்திகள்
9—10 அறிவிப்புகள்
9—20 பக்திப் பாடல்கள்
9—30 குலந்தரையாடல்

## மார்ச் 7 (புதன்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0530 | குவைத் | கே | யூ | 361 |
| 0530 | ரியாத் | யூ | எல் | 272 |
| 0620 | லண்டன் துபாய் | யூ | எல் | 504 |
| 0745 | ஜெத்தா தஹ்ரான் | | | |
| 0800 | தஹ்ரான் கராச்சி | கே | எல் | 801 |
| 0825 | துபாய் | ஈ | கே | 802 |
| 1130 | மாலைதிவு | யூ | எல் | 122 |
| 1225 | பாங்கொக் | டி | ஜீ | 307 |
| 1310 | மாலைதிவு | ஈ | கே | 803 |
| 1345 | திருவனந்தபுரம | யூ | எல் | 162 |
| 1945 | மாலைதிவு சிங்கப்பூர் | யூ | எல் | 102 |
| 2000 | கோலாலம்பூர் | யூ | எல் | 313 |

### புறப்படும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0030 | சோபியா | எல்இஸட் | | 596 |
| 0115 | அபுதாபி கோஹேகன் சிப்போல் | யூ | எல் | 563 |
| 0230 | துபாய் சூரிச் பிராங்பேர்ட் | யூ | எல் | 547 |
| 0720 | குவைத் | கே | யூ | 361 |
| 0800 | மாலைதீவு | யூ | எல் | 121 |
| 0915 | ஜெத்தா தஹ்ரான் | எஸ் | வி | 346 |
| 0925 | துபாய் | ஈ | கே | 802 |
| 0930 | கோலாலம்பூர் சிங்கப்பூர் | யூ | எல் | 312 |
| 1300 | திருவனந்தபுரம | யூ | எல் | 161 |
| 1325 | பாங்கொக் | டி | ஜி | 307 |
| 1410 | மாலைதீவு | ஈ | கே | 803 |
| 1545 | மாலைதீவ | யூ | எல் | 101 |
| 1755 | பர்பாய் கராச்சி | யூ | எல் | 183 |
| 1905 | குவைத் | யூ | எல் | 227 |
| 1940 | கராச்சி தஹ்ரான் சிப்போல் | யூ | எல் | 456 |
| 2115 | பக்குவொக்கா | கே | எல் | 802 |
| 2330 | துபாய் லண்டன் | யூ | எல் | 503 |

## மார்ச் 8 (வியாழக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0540 | கராச்சி, பமபாய் | யூ | எல் | 182 |
| 0625 | சூரிச், சாஜா, | பி | பி | 602 |
| 0715 | சிப்போல், அபுதாபி | யூ | எல் | 564 |
| | பாரிஸ் | யூ | எல் | 664 |
| 0740 | பிராங்போர்ட், சூரிச் துபாய் | யூ | எல் | 548 |
| 0800 | துபாய் | ஈ | கே | 800 |
| 1005 | வியன்னா | எல் | டி | 903 |
| 1105 | திருச்சி | யூ | எல் | 132 |
| 1140 | சென்னை | ஐ | சி | 573 |
| 1150 | சோபியா துபாய் | எல் | இசட் | 581 |
| 1230 | ஹமபோ, டசில்டர் | எல் | ரி | 724 |
| 1350 | கராச்சி, மாலைதிவு | பி | கே | 776 |
| 1500 | திருவனந்தபுரம | ஐ | சி | 507 |
| 1515 | மொஸ்கோ, துபாய் | எஸ் | யூ | 545 |
| 1530 | சென்னை | யூ | எல் | 122 |
| 1800 | திருச்சி | ஐ | சி | 577 |
| 1950 | நெரிடா, | யூ | எல் | 457 |
| | பக்குவொக்கா | யூ | எல் | 637 |
| 2020 | மாலைதிவு | யூ | எல் | 102 |
| 2350 | ஹொங்கொங | யூ | எல் | 423 |
| | பாங்கொக் | யூ | எல் | 623 |

### புறப்படும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0725 | மாலைதிவு, சார்ஜா, | பீ | பீ | 602 |
| | சூரிச் | யூ | எல் | 131 |
| 0815 | திருச்சி | | | |
| 0845 | பாங்கொக் | யூ | எல் | 422 |
| | ஹொங்கொங | ஈ | கே | 800 |
| 0915 | துபாய் | | | |
| 1130 | மாலைதிவு | எல் | டி | 903 |
| | வியன்னா | யூ | எல் | 121 |
| 1200 | சென்னை | ஐ | சி | 573/508 |
| 1235 | திருவனந்தபுரம | எல் | டி | 724 |
| 1415 | டசில்டர், ஹம்போ | பி | கே | 776 |
| 1505 | கராச்சி | | | |
| 1540 | திருச்சி | ஐ | சி | 507/578 |
| 1630 | மாலைதிவு | யூ | எல் | 101 |
| 1715 | துபாய், மஸ்கட் | எஸ் | யூ | 545 |
| 1840 | சென்னை | ஐ | சி | 577/574 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — 4 ஜீ — தாய் எயர் வேய்ஸ். பி ஏ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை. டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

# வானொலி

## 7—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — ஒப்பிலியப்பன் சுப்ர பாதம
5-30 பாமாலை — திருப்பாசுரம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை வழங்குபவர்: மௌலவி எம எல் எம முபாரக் அவர்கள்
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 வீணை — சூரியநாராயணன்
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 நெஞ்சோடு நெஞ்சம — மாதர் மஜ்லிஸ் பிரதி: பீர்தௌஸியா ஆப்தின்
9-00 வர்த்தகசேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 கிளாரினட் — ஏ கே சி நடராஜன்
10-45 சிறுவர் பாடல்கள்
11-00 புல்லாங்குழல் — என் ரமணி
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 அருளமுதம
6-30 மகாவலி நிகழ்ச்சி
7-00 களத்துமேடு — விவசாய சஞ்சிகை
7-15 கதமபம — குறு நாடகங்கள்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —

8-00 தர்ஜுமதுல் குர்ஆன்
8-05 இஸ்லாமிய கீதம பாடுபவர்: மஹ்தூம அப்துல்காதிர்
8-20 கிராஅத்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 தஜ்வீத் வகுப்பு நடத்துபவர்: மௌலவி எஸ் எம ஆரிப் அவர்கள்
8-40 இலக்கியக் களஞ்சியம தொகுப்பு: கலைவாதி கலீல்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலைப்பூங்கா — நடத்துபவர்: சற்சொருபவதி
10-00 இசைக்கச்சேரி — ஐ வேலாயுதபிள்ளை
10-45 பஜன் — எம எஸ் சுப்பு லக்ஷ்மி
11-00 ஒலிபரப்பு முடிவு

## 8—3—1990

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை பார்த்தசாரதி சுப்ரபாதம
5-30 சாயிபஜன்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை வழங்குபவர் மௌலவி எம எல் எம முபாரக்
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 லயவிந்யாசம மிருதங்கம எஸ் மகேந்திரன்
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி நடத்துபவர் எம சபா மஹ்மூர் அவர்கள்
9-00 வர்த்தக சேவை

பகல்

10-00 இசையமுதம
10-30 தவில்கச்சேரி வலங்கைமான் சண்முக சுந்தரம
10-45 பகுதுப் பாடல்கள்
11-00 வயலின் குன்னக்குடி வைத்தியநாதன்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இந்துசமயப் பேச்சு பேசுபவர் தமிழின்பம கணபதிப்பிள்ளை
6-30 வளரும பயிர் நடத்துபவர் வனஜா ஸ்ரீநிவாசன்
6-45 பாவளம நடத்துபவர் தில்லையூர் செல்வராஜன்
7-00 கிராம சஞ்சிகை வி ஏ சிவஞானம
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு

8-00 முஸ்லிம நிகழ்ச்சிகள் தர்ஜுமதுல் குர்ஆன்
8-05 திருக்குர்ஆன் விளக்கம நிகழ்த்துபவர் மௌலவி ஏ எம அபுல் ஹசன்
8-20 கிராஅத்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 மணி மொழிகள் வழங்குபவர் மௌலவி பி எம எம் அபூபக்கர்
8-40 தத்துவவித்தகள் தொடர் பேச்சு வழங்குபவர் கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி
8-50 இஸ்லாமிய கீதம
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 குலந்திரையாடல் சர்வதேச மகளிர் தினம பங்குபற்றுவோர் பேராசிரியர் பி குலசிங்கம செல்வி எஸ் ஆறுமுகம செல்வி சற்சொரூபவதி நாதன்
10-00 இசைக்கச்சேரி பொன் சுந்தரலிங்கம
11-00 ஒலிபரப்பு முடிவு

# ரெலிவிஷன்

## 7—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி சிங்களம
5-00 செய்திகள் - சிங்களம
5-30 ராகபாவம்
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 உரை நிகழ்ச்சி
6-30 செய்திகள் - தமிழ்
6-55 பிரதிச்சாரா
7-30 டார்ஸான்
8-00 செய்திகள் - சிங்களம
8-30 கெக்குலுமல்
9-00 மகளிர் தினம
9-30 செய்திகள் - ஆங்கிலம
10-00 அப்பாதைட்
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. ரி. என்.

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 மெடிசினல் டிரக்ஸ்
6-30 செய்திகள் - சிங்களம
6-45 சித்ர கீத்த
7-30 டேஞ்சர் பே
8-00 வேல்ட் எக்கோ
8-30 வெரயிட்டி பெயார்
8-50 கோப்பி கடே
9-20 மிஷன் இமபொசிபள்
10-00 செய்திகள் ஆங்கிலம
10-26 மிஷன் இம் பொசிபள் தொடர்ச்சி

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# ஆசிரிய இடமாற்றம் இடைநிறுத்தப்படும்

கொழும்பு மார்ச் 6

பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்கள் பற்றி மீளாய்வு செய்யப்படும் வரை ஆசிரியர்களின் சகல இடமாற்றங்களும் இடை நிறுத்தப் படும்.

கல்விச் சேவைகள் ஆணைக் குழு இவ்வாறு தீர்மானித்த உள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத் தில் இருந்து இதுவரை 15,000 ஆசிரியர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் திரு ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித் தார்.

இந்த இடமாற்றங்கள் காரணமாகப் பாடசாலைகளுக்குச் சரியான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்றும், பல முறைகேடுகள் நடந்துள்ள தாகவும் தலைவர் கூறினார்.

இதனால் நகர்ப்புற பிரதான பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்களும், பின்தங்கிய பகுதி களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையும் நிலவுவதாகவும் திரு மெண்டிஸ் மேலும் தெரிவித்தார்.

(ல-007)

எமது 40 வருட அரசியல் போராட்டத்தில்

## பழைய தலைமைத்துவங்கள் பிழையான முறையில் செயற்பட்டன

— மாத்தயா

மட்டக்களப்பு மார்ச் 6

40 வருடகால எமது அரசி யல் போராட்டத்தில் பழைய தலைமைத்துவங்கள் பிழை யான செயற்திட்டங்களில் செயற்பட்டன. அவர்களுக்கு சரியான தலைமைத்துவம் இருக்கவில்லை இதனால் நெருக்கடிகளை எதிர்நோக் கிய சந்தர்ப்பத்தில் அவற்றிற்கு முகம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. இதனால் அவர்கள் மக்களால் அரசிய லில் இருந்து வெளியேற்றப்பட் டார்கள்,

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைவர் திரு மகேந்திரராஜா (மாத்தயா) கடந்த ஞாயிற்றுக்கிழமை மட் டக்களப்பு வெபர் அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத் தில் உரையாற்றுகையில் கூறி னார்.

பிரதி தலைவர் எஸ் கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாத்தயா தொடர்ந்து கூறியதாவது.

இம்மண்ணில் தொடர்ந்து அமைதி, சமாதானம் நிலவ எமது பலம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். இன்று ஜனநாயகம் அரசியலுக்கு வந்தாலும் எமது பலத்தை உறுதி செய்ய வேண்டி யவர்களாகவே உள்ளோம்.

1972 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசு இன ஒழிப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டது. ஆரம்பத்தில் தலைமறைவான இயக்கத்தில் ஈடுபட்டு வந்த விடுதலைப் புலி கள் பின்னர் நேரடி யுத்தங்களில் ஈடுபட்டனர். இன்று 18 வருடங்க ளின் பின்னர் மக்கள் சக்தியுடன் ஜனநாயக அமைப்பாக மாறி விட்டோம்.

இவ்வாறு மாத்தயா கூறி னார்.

புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு அன்டன் பால சிங்கம் பேசும் போது.

இந்தியாவின் புதிய அரசுடன் பேச நாம் தயாராக உள்ளோம் அன்று ராஜீவ் விட்ட தவறு குறித்து புதிய இந்திய அரசு கவலை கொண்டுள்ளது புதிய அரசு எம்முடன் பேச விரும்பு கின்றது. ராஜீவின் வெளிநாட்டு கொள்கையை நாம் எதிர்க்கி றோம். ஆனால் நாம் இந்திய மக்களுக்கு எதிரானவர்கள் அல் லர் என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோக ரத்தினம் (யோகி) பேசும்போது

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1990 மார்ச் 5 இல்—

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3998—50 | ரூ | 4001—50 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம்; 1990 மார்ச் 5 இல்—

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3997—60 | ரூ | 4002—35 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 6566—44 | ரூ | 6581—52 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 2328—84 | ரூ | 2342—27 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 687—90 | ரூ | 695—14 |
| 100 ஜப்பான் யென் | ரூ. | 261—00 | ரூ | 26—7541 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப் பிடிக்கும் மத்திய வங்கி வாங்கும் விகிதம் ஆகக் குறைந்த வாங்கும் விகிதம்; ஆகக் கூடிய விற்கும் விகிதம்:

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 123—73 | ரூ | 124—18 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 612—84 | ரூ | 615—26 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 233—78 | ரூ | 234—75 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 56—50 | ரூ | 56—71 |
| 100 நேபாள ரூபா | ரூ. | 139—57 | ரூ | 140—15 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ. | 185—89 | ரூ | 186—66 |

நிம்மதியான நித்திரைக்கு

தெங்கற்ற

ARS நுளம்புச் சுருளை

பாவியுங்கள்.



தவறுதலாக கிளாஸை உடைத்ததால்

## மாமனார் தாக்கி மருமகன் மரணம்

கொழும்பு மார்ச் 6

தவறுதலாக கைதவறி கண் ணாடி கிளாஸ் ஒன்றை உடைத்து விட்டதற்காக 12 வயது சிறுவன் தனது மாம னாரால் தாக்குப்பட்டு மரண முற்றான்.

இந்தச் சம்பவம் வெள்ளவத் தையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரை மார்ச் 20ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கும்படி நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

தனியார் கம்பெனி ஒன்றில் ஆலோசகராக கடமையாற்றும் இராசையா திருச்செந்தூரன் என்ற நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டவராவார்.

கடந்த சனிக்கிழமை பகல் களுபோவிலை ஆஸ்பத்திரிக்கு மேற்படி சிறுவன் சந்தேக நப ரால் சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளான்.

எனினும் சிறுவன் ஆஸ்பத்திரி யில் சேர்க்கப்படுவதற்கு முன் னரே இறந்து விட்டான்.

இந்தச் சிறுவனின் மரணம் தொடர்பான விசாரணை கல் கிசை நீதிவான் திரு விஜய வீர யம அளிக்கையில் தனது மகன் திருச்செந்தூரன் காலஞ்சென்ற சிறுவனை தடியால் தாக்குவதை கண்டதாகக் கூறினார்,

சிறிது நேரத்தின் பின் சாப் பிட்டு விட்டு கைகழுவிய சிறுவன் அதே இடத்தில் தரையில் விழுந்து விட்டான்.

உடனே சந்தேக நபரான எனது மகன் அந்தச் சிறுவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென் றார், ஆனால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுவதற்கு முன் சிறு வன் இறந்து விட்டான் என அவர் மேலும் கூறினார்,

வைத்திய அதிகாரி டாக்டர் நடேசன் பிரேத பரிசோதனை களை நடத்தினார்,

மேற்படி சிறுவன் தடியினா லும் கைகளினாலும், கால்களினா லும் தாக்கப்பட்டுள்ளான், இத னால் உள்ளும் புறமும் 75 காயங் கள் ஏற்பட்டுள்ளன,

சிறுவன் இறக்கும் தறுவாயில் அவனது உடலில் 15 புதுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன,

இந்தச் சிறுவனின் மரணம் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டதி னால் ஏற்பட்டது என நீதிவான் தீர்ப்பளித்து, சந்தேக நபரை 20

## எயிட்ஸ் கர்ப்பிணி: பிரசவத்துக்கு டி சொய்சா டாக்டர்கள் உதவ மறுப்பு

கொழும்பு மார்ச் 6

எயிட்ஸ் நோயால் பீடிக்கப் பட்டுள்ள கர்ப்பிணிக்கு பிரச வம் பார்க்க கொழும்பு டி சொய்சா மகப்பேறு மருத் துவ நிலைய டாக்டர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இப்பெண்மணிக்கு பிரசவம் பார்ப்பது தொடர்பான தமது நிலையை விளக்கி மேற்படி டாக் டர்கள் சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத்துக்கு கடித மொன்றை அனுப்பி வைத்துள்ள னர்.

ஆனால் இக்கடிதத்துக்கு சுகா தார அமைச்சு இதுவரை எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை என்று தெரிகிறது,

(ந-032)

## ஆஸ். ஊழியர்கள் மீது டாக்டர் தாக்குதல்

கொழும்பு மார்ச் 6

மதுபோதையில் வந்த டாக் டர் பெண் ஊழியர் ஒருவரை யும் மற்றும் மூன்று சிற்றூழி யர்களையும் தாக்கினார்,

இதனை ஆட்சேபித்து வைத் தியசாலை ஊழியர்களும், தாதி மாரும் திடீர் வேலை நிறுத்தத் தில் குதித்தனர்.

சம்பந்தப்பட்ட டாக்டரை தற்காலிக வேலை நீக்கம் செய் யும்படி சுகாதார அமைச்சு உத் தரவிட்டுள்ளது,

இந்த பரபரப்பான சம்பவம் ராகமை ஆஸ்பத்திரியில் இடம் பெற்றுள்ளது,

தனது வார்டிற்கு விஜயம் செய்த டாக்டர் வழமையாக தனக்கு வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் கிளாஸில் நீர் வைக்கப் பட்டிருக்காததைக் கண்டார்,

இதனால் ஆத்திரமடைந்த அவர் ஆஸ்பத்திரி ஓவசியரை தாக்கினார், அவரது தாக்குத லில் இருந்து தப்புவதற்காக ஓவ சியர் அவரது பிடியில் இருந்து விடுபட்டு ஓடினார்,

தொடர்ந்து ஓடிய டாக்டர் எதிர்ப்பட்ட ஒரு பெண் ஊழிய ரையும் விட்டு வைக்கவில்லை, அவரையும் தாக்கினார், இத னால் அந்தப் பெண் ஊழியர் படுகாயங்களுக்கு உள்ளானார்,

இவர் இப்போது ராகமை ஆஸ்பத்திரியில் 4ஆம் வார்டில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பாக ராகமை பொலீஸில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது,

(ந-ய)

## கொழும்பு வருகை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு அன்டன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு மகேந்திரராஜா (மாத்தயா) செயலாளர் நாயகம் யோகி ஆகியோர் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு வந்தனர்.

வடக்கு, கிழக்கு முதல்வர் திரு வரதராஜப்பெருமாளின் தனித் தமிழ்ஈழ பிரகடனம




* ஜப்பானிய கூட்டுத் தயாரிப்பில் உருவான ஏ. ஆர். எஸ் நுளம்புச் சுருளை கேட்டு வாங்குங்கள்–
* 7 மணித்தியாலங்கள் எரியக் கூடியது–
* 10 மணித்தியாலங்களுக்கு நுளம்புத் தொல்லையிலிருந்து பாதுகாக்கும் தன்மையுள்ளது–
இலகுவாக பிரித்து எடுக்கக் கூடியது–

தயாரிப்பாளர்கள்–

**லங்கா மொஸ்க்கிட்டோ**
**கொயில் கம்பெனி**
**(பிரைவேட்) லிமிட்.,**
244 பாங்ஷால் வீதி கொழும்பு–11
தொலைபேசி– 25529/545348
நாடு முழுவதும் ஏஜண்டுகள் தேவை– (விலை ரூ– 15/–)



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இண்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல. 1613. வெளியீட்டு திகதி 7 மார்ச் 1990–

DINAPATHI, Gunasena Mawatha, Colombo 12 —
P.O. Box 1613


ரத்தினம (யோகி) பேசுமபோது

முஸ்லிம மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன அவை பெரிய பிரச்சினைகள் அல்ல எங்களுடன பேச்சுவார்த்தை நடத்திவரும அமைச்சர் ஜனாப் ஹமீதுவுடன் கலந்துரையாடியுள்ளோம், முஸ்லிமகளிடையேயுள்ள கட்சிகளுடனும குழுக்களுடனும அமைச்சரை பேசும்படி கூறியுள்ளோம– எது தீர்வு என அவை கருதுகின்றனவோ அதற்கு நாம ஒத்துழைப்பு வழங்குவோம–

தமிழரும முஸ்லிமகளும பிரிந்து போக முடியாதவர்கள் பிரிந்து போனால் அது இரு சாராருக்கும பாதகமாக அமையும– என்று கூறினார்.

கவிஞர் காசிநாதன் செல்வி சந்திரா திரு செங்கதிர் மௌலவி முஹமட் திரு பீ மதுரநாயகம, அருணா (பிராந்திய தளபதி) ஆகியோரும உரையாற்றினர்–

(ந–கு)

## யானை தாக்கி மாணவி பலி

கொழும்பு மார்ச் 6

பாடசாலை மாணவி ஒருவர் காட்டு யானையினால தாக்கப்பட்டு மரணமானார் இப்பரிதாப சமபவும பொலன்னறுவை மாவட்டத்துக்கு உட்பட்ட ஹபரனை பகுதியில் இடம பெற்றது–

ஹபரணை ஹிரிவட்டுன்ன பகுதி வாசியான சுரேகா பெர்னாண்டோ (வயது 12) என்ற சிறுமியே இவ்வாறு யானை தாக்கி மரணமானவராவார்–

யானையால் தாக்குண்ட இவரது தாயார் கவலைக்கிடமான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்

(ல–வ)

கிசை நீதிவான் திரு விஜய வீரவர்தன முன்னிலையில் நடைபெற்றது,

சந்தேக நபரின் தாயார் இராசையா சிவனம்மா சாட்சி

திர்ப்பளித்து, சந்தேக நபரை 20 ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்குமபடி உத்தரவிட்டார்,

(ந–ய)

அவரை விரட்டிக் கொண்டு டாக்டரும ஓடினார். அப்போது எதிர்ப்பட்ட இரண்டு சிற்றூழியர்களையும அவர் தாறுமாறாக தாக்கினார்,

தனித் தமிழ்ஈழ பிரகடனம குறித்து அரசாங்கம இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தலாம என அரசாங்க வட்டாரங்களில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன (ந–மு)


பார் போற்றும் மகிபர்...! பாரதத்தின் அதிபர் ...!!

கரீபே நவாஸ் — குத்புல்ஹிந்த் — அதாயே றசூல்

செய்யிதுனா ஹாஜா முயீனுத்தீன் (சிஷ்தி) அவர்களின்

# 3வது வருடாந்த மனாகிப் மஜ்லிஸ்

## சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றோம்

ஹாஜாஜீ சந்தனக்கூடு, கொடியேற்றம் : 16.03.1990 பி. ப. 4.30

ஹாஜாஜீ கந்தூரி விநியோகம் : 18.03.1990 பி. ப. 5.30

இடம் : பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல் — காத்தான்குடி–5.

பெருமானார் (ஸல்) அவர்களின் சுபசோபன ஆசியுடன் பாரத நாடு வந்து பல லட்சம மாந்தர்களை புனித தீனுல் இஸ்லாம மார்க்கத்தில் இணைத்த அற்புத நாயகர் அஜ்மீர் அரசரின் பெயரால் நடைபெறும இக் கந்தூரி வைபவத்தில் கலந்து கொண்டு அப் பெருந்தகையின் பேரருளைப் பெற்றேகுமாறு நாடெங்கிலுமுள்ள முஹிப்பீன்களையும தரீக்கத் வழி ஆதரவாளர்களையும அன்புடன் அழைக்கின்றோம

நிர்வாக சபை–

புனித குத்பிய்யா மஜ்லிஸ்

கரீப் நவாஸ் பௌண்டேஷன்,

பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல்

காத்தான்குடி–5 (ஸ்ரீலங்கா)
தொலைபேசி– 065–2625